பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 18 செவ்வாய்க்கிழமை 02.05.2023 கதிர் 173

# ஊழியர் சேமலாப நிதியில் 96%ஐ ஏப்பம் விடதிட்டம்

## ஆட்சியாளர்களின் நோக்கத்தை முறியடிக்கவேண்டும் என்கிறது ஜேவிபி

கொழும்பு, மே 02

உழைக்கம்வர்க்கத்தின்சேமிப்பான ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 96 சதவீதத்தினைக் கடனாகப் பெற்றுள்ள ஆட்சியாளர்கள் அதனைத் தள்ளுபடி செய்யப்பார்கின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்

தேசிய மக்கள் சக்தியின் மே தினக்கூட்டம் 'நாட்டைவிற்கின்ற, மக்களை வதைக்கின்ற, ஊழல் மிக்க ஆட்சியை தோற்கடிப்போம். மக்கள்நேயமுள்ள ஆட்சியைக்கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்றது.

சிவப்பு மே தினம் என்று அடையாளப்படுத்த தேசிய மக்கள்சக்தியின்மேதின ஊர்வலம் கொழும்பு - பி.சி.ஆர். மைதானத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி, ஹெவ்லொக் வீதி, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கேம்பிரிட்ஜ் டெரஸ், கன்னங்கரா மாவத்தை, எப்.ஆர்.சேனாநாயக்கமாவத்தை ஆகிய பகுதிகள் ஊடாக விகார மாதேவி பூங்காவுக்கருகில் நிறைவு பெற்றது.

☞2

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்றைய மே நாளில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே சில விடயங்களைக் கவனிக்கத்தக்கதாக அமைந்தது. அவை கட்சிகளின் உள்வீட்டுக் குழப்பங்களின் விளைவுகளாக இருக்கக்கூடும் என்றும் படுகின்றது.


தமிழ் அரசுக் கட்சியீன் மே தினக் கூட்டங்களை இம்முறை வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் நடத்துவதாக முடிவெடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகின்றது. ஆனால், கட்சியின் செயற்குழு, அல்லது அரசியல் குழு கூடி எப்போது இந்த முடிவுஎடுக்கப்பட்டதுஎன்பதுதெரியவில்லை. மே தினக் கூட்டத்திற்கான அழைப்பைக்கூட கட்சி விடவில்லை. கிளிநொச்சி மாவட்டக் கிளையே விடுத்திருந்தது.

கிளிநொச்சி மாவட்டக்

☞2

## வடமராட்சி கிழக்கில் மண் டிப்பர் மீது சூடு

### அதிரடிப் படையின் சோதனையின் போது சம்பவம்



வடமராட்சி கிழக்கில் அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு சோதனையில் நிறுத்தாமல் சென்ற டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தியுள்ளனர்.

வடமராட்சிபகுதியில்கஞ்சாகடத்தப்டுவதாக விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில்

☞2

## அல்லைப்பிட்டி விபத்தில் நேற்று இரு பெண்கள் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்அல்லைப்பிட்டிப் பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்கள் இருவரும் எதிரே வந்த காரும் மோதி இந்த விபத்து ஏற்பட்டது. இதில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் உயிரிழந்துள்ள அதேநேரம் காரில் வந்த நால்வர் காயமடைந்தனர்.

இந்தவிபத்தில்கோப்பாய் பகுதியைசேர்ந்தநவநீதராசா நிலக்சனா (வயது 26) மற்றும் மானிப்பாய் பகுதியை சேர்ந்த கீதாரட்ணம் திவ்யா (வயது 31) ஆகிய இருவரே உயிரிழந்தனர்.

காரில் பயணித்த வடமராட்சி புலோலியை சேர்ந்தவர்களான சிவசுப்பிரமணியம் சுதாகரன் மற்றும் கருணாமூர்த்தி விமலாதேவி ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சைபெற்றுவருகின்றனர்.

## 2048ஐ இலங்கையின் அபிவிருத்தி ஆண்டாக மாற்றுவதற்கு ஒன்றாகக் கைகோர்ப்போம்

### ஜனாதிபதி ரணில் மே தினத்தில் அழைப்பு



2048 ஆம் ஆண்டை இலங்கையின் அபிவிருத்தி ஆண்டாக மாற்றுவதற்காக பாரம்பரிய அரசியலில் இருந்து விடுபட்டு நாட்டை பற்றி புதிதாக சிந்தித்து புதியபாதையில் பயணிக்கும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை மாற்றுவோம் என ஜனாதிபதி ரணில் விக் கிரம சிங்க அனைத்து ஐக் கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும்அழைப்புவிடுத்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் திங்கட்கிழமை '2048 வெல்வோம்' என்ற தொனிப்பொருளின்கீழ்ஐக்கியதேசியக் கட்சியின் மே தினம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மே தினத்தில் 68 தொழில்சார் சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித் துவப்படுத்தும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினூடாகஉரையாற்றும்போதே ஜனாதிபதி

☞2

## ஊழல், மோசடி ஆட்சியுடன் ஒருபோதும் இணைந்து செயற்படப்போவதில்லை

### எதிர்க்கட்சித்தலைவர் சஜித் தெரிவிப்பு



பதவிகளைஎதிர்பார்த்து நாம் அரசியல் செய்யவில்லை. முறைமை மாற்றத்தினை எதிர்பார்த்தே நாம் அரசியலில் ஈடுபட்டு வருகின்றோம் ஊழல் , மோசடிகள் மிக்க இந்த ஆட்சியுடன் நாம் ஒருபோதும் இணையப் போவதில்லை. எம்மில் எவரும் இரட்டை நிலைப்பாட்டில் இல்லை. அவ்வாறு இரட்டை நிலைப்பாடுடையவர்கள் இருப்பவர்கள் தாராளமாக விலகிச் செல்லலாம் என்று ஐக்கிய மக்கள்சக்தியின்தலைவரும், எதிர்க்கட்சி

☞2

## பொருளாதார பாதிப்பிலிருந்து மீள அனைவர் ஒத்துழைப்பும்வேண்டும்

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைப்பு

பொருளாதாரப்பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

பொரள்ளகெம்பல்மைதானத்தில் நேற்று இடம்பெற்ற பொதுஜனப்பெரமுனவின்மே தினக்கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தாவது:

ஆட்சியில் இருந்தபோதும், எதிர்க்கட்சியில் இருந்த போதும் உழைக்கும்

☞2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமுலமே மிக மோசமானது என்கிறார் பீரிஸ்



என் அரசியல்வாழ்க்கையில் பார்த்த மிக மோசமான சட்டம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்று, சுதந்திர மக்கள்சபையின் உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பசியை எதிர்த்துப் போராடுவோம், ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம் எனும் தொனிப்பொருளில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டலஸ் அழகப் பெரும, சன்ன ஜயசுமன,

☞3

## அரகலயவின் இலக்கை வென்றெடுக்க உழைக்கும் வர்க்கத்தால்தான் முடியும்

### முன்னிலை சோசலிசக் கட்சி செயலர் அறைகூவல்

அரகலயவின் இலக்கு இன்னமும் முழுமையாக நிறைவடையவில்லை. உழைக்கும்வர்க்கத்தினரால் மாத்திரமே இந்தப் போராட்டத்தினைவெற்றியடையச்செய்ய முடியும் என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரதம செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்தார்.

'சர்வதேச நாணய நிதியம் சாவுப்பொறி: அமெரிக்க, இந்திய காலனித்துவத்துக்கு எதிரானஉழைக்கும்மக்களின் சக்தி'எனும்தொனிப்பொருளில் முன்னிலை சோசலிக் கட்சியின் மேதினப் பேரணி தெல்கந்தவிலிருந்து நுகேகொட ஆனந்த சமரக்கோன் திறந்த வெளி அரங்கு

☞3

## தேவை எனில் மீண்டும் ஆட்சியைப் பிடிப்போம்

### மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



சவால்களை கண்டு, நானும் எனது தரப்பினரும் ஒருபோதும் பின்வாங்கவில்லை. தேவையாயின் பலமிக்க சக்தியாக ஒன்றிணைந்து மீண்டும் ஆட்சியைகைப்பற்றுவோம் என்று பொது ஜன பெரமுனவின்தலைவரும், முன்னாள் ஜனதிபதியுமான

☞3

## சாத்தியமான வழிகளில் எல்லாம் போராடி சுயநிர்ணய உரித்தை அடைந்தே தீருவோம்

### தமிழ் அரசுக் கட்சி மே தினத்தில் பிரகடனம்





சாத்தியமான வழிமுறைகள் எல்லாவற்றிலும் போராடித் தமிழர்களின் தாகமாகிய சுயநிர்ணய உரிமையைஅடைந்தேதீருவோமென திடசங்கற்பம் கொள்வதாகத் தனது மேநாள் பிரகடனத்தில் தெரிவித்துள்ளது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

கட்சியின் மே நாள் கூட்டம் கிளிநொச்சி, பசுமைப் பூங்கா வளாகத்தில் திங்கட்கிழமை நடந்தது. கட்சியின் கிளிநொச்சிக் கிளை ஏற்பாடு செய்திருந்த இந்த மே நாள் கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மூத்த உப தலைவர் சி.வி.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் ஆகியோர்விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட மே நாள் பிரகடனத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத்தீவு அதலபாதாளத்தை நோக்கித் தனது பொருளாதாரத்தை பயணப்படவைத்துள்ளஅதே வேளை, தமிழ்த் தேசிய இனத்தின் பொருளாதார வளத்தையும், பொருளாதார மேம்பாட்டையும்

☞3

## கொழும்பில் நேற்றிரவு திடீர் துப்பாக்கிச்சூடு

### 9 பேர் காயம்

கொழும்பு - துறைமுக நுழைவாயில் பகுதிக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் காயமடைந்து, கொழும்பு தேசியவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தின் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்

☞3

## எமது தயவின்றி யாராலும் ஆட்சியமைக்க முடியாது

### மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



எமது கட்சியின் ஆதரவின்றி எந்தவொரு தலைமையாலும் ஆட்சி அமைக்க முடியாது என்று ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான

☞3

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளையால் ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட அந்தக் கூட்டத்தில் தலைவர் மாவை. சேனாதிராசாவைக் காண வில்லை. கட்சியின் அடுத்த தலைமைக்குப் போட்டியிடுபவர்கள் என்று கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ.சுமந்திரனும் எஸ்.சிறீ தரனுமே அங்கு இருந்தார்கள். இவர்களுடன் மூத்த தலைவரான சி.வி.கே.. சிவஞானமும் இருந்தார். கட்சியின் செயலாளரும் இந்த மே தினத்தில் மிஸ்ஸிங்.

யாழ்ப்பாணம் உட்பட வேறுமாவட்டங்களில்இருந்து வழமைபோன்று மே தினத்திற்கென்று தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் கிளிநொச்சிக்குப் பெருமெடுப்பில் வந்ததாகவும் தெரியவில்லை. பெரும்பாலும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர். கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகள் இவ்வளவு தூரம் வெளித் தெரியும் வகையில் ஒரு நிகழ்வு அண்மைக் காலத்தில் இதுவே நடந்திருக்கின்றது.

எதனால் இப்படி, உள்ளே என்னதான் நடந்தது என்கிற விவரங்களை முழுமையாகப் பின்னர் உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

*****

வடக்கில் மேதின நிகழ்வுகளைச் சிறிய கட்சிகள்கூடத் தமதுசக்திக்குஉரியவகையில் கூட்டங்களாகவாவது நடத்தின. ஆனால் தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று உரிமை கோரித் திரியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டிலோ அல்லது அதிலுள்ள ஏதாவது ஒரு கட்சியின் ஏற்பாட்டில் தானுமோ ஒரு மே தினக் கூட்டம் கூட நடக்கவில்லை.

இதற்கு முந்தைய ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற பெயரில் பெரும்பாலும் தமிழ் அரசுக் கட்சி ஏற்பாடு செய்யும் மே தினக் கூட்டங்களில் இந்தத் தலைவர்களும் கலந்துகொள்வார்கள். அந்தப் பழக்க தோசத்தில் இந்தத் தடவை தாங்களேதான் நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை மறந்து விட்டார்களோ தெரியவில்லை. அடையாளத்துக்குத்தன்னும் ஒரு சிறு கூட்டம்கூட இந்தக் கூட்டணியின் பெயரிலோ அதிலுள்ள கட்சிகளின் பெயரிலோ நடக்கவில்லை.

ஒருவேளை அவர்கள் அறிவித்ததைப் போல அவர்களது ஜனநாயகக் கூட்டணிக்கு ஒரு தலைவரை, செயலாளரை, ஒரு நிர்வாகத்தை அவர்கள் தெரிந்தெடுத்திருந்தால் மே தினக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருக்கக்கூடும். ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்ட கையோடு இந்தக் கூட்டணியும் செயலிழந்து போனதால் யாரும் இதைப் பற்றிக் கண்டுகொள்ளவில்லை. கூட்டணியின் முதல் தலைவராக யாரைப் போடுவது என்பதில் கட்சிகளுக்கு இடையில் ஒரு இணக்கப்பாடு வராத காரணத்தால் இன்னும் ஜனநாயகக் கூட்டணிக்கான நிர்வாகக் குழு தெரிவு செய்யப்படவில்லை.

கூட்டமைப்பு என்று உரிமை கோருவதால் பழைய கூட்டமைப்பிலிருந்து தொடர்ந்தும் அங்கம் வகிப்பது என்கிற வகையில் தமக்கே தலைமை வரவேண்டும் என்று ரெலோ கருதுகின்றது. ஆனால், தலைமையை அப்படி இலகுவில் விட்டுக் கொடுப்பதற்கு மற்றைய கட்சிகள் தயாராகவில்லை. இது புதுக்கூட்டு, கூட்டத்தைப் போட்டு அதில் யார் தலைவர், செயலாளர் என்று முடிவு செய்யலாம் என்பதுதான் மற்றையவர்களின் முடிவு. தனக்குத் தலைமைப் பதவி கிடைப்பது உறுதியாகாமல் இப்போதைக்கு அந்தக் கூட்டத்தைக் கூட்ட ரெலோ தயாரில்லை என்பதால் கூட்டம் நடந்தபாடில்லை.

- இடிமின்னல் -

## ஊழியர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையில் அங்கு நடைபெற்ற பிரதான மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

சர்வதேசக் கடன்களை மறுசீரமைத்து தள்ளுபடி செய்வதற்கு முன்னதாக உள்நாட்டுக் கடன்களை குறைப்பதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அரசின் கடன் 27 பிரில்லியனாக உள்ளது. அதில் 14 பிரில்லியன் வெளிநாட்டுக்கடனாகும். 13 பிரில்லியன் உள்நாட்டுக் கடனாகும். இந்த நிலையில் தான் உள்நாட்டுக் கடனை குறைப்பதற்கு முயற்சிக்கின்றார்கள்.

உள்நாட்டில் அரசுக்குக் கடன்களை வழங்கியுள்ளவர்கள் யார் என்று பார்க்கையில், வணிக வங்கிகளும், நிதி நிறுவனங்களும்தான் உள்ளன. இந்தக் கடனில் மூன்றிலொரு பங்கினை ஊழியர் நம்பிக்கை நிதியமும், உழியர் சேமலாப நிதியமும் தான் வழங்கியுள்ளன.

தற்போது அரசுக்கு வழங்கப்பட்டுள்ள யோசனையின் பிரகாரம் உள்நாட்டுக்கடன்களே முதலில் மறுசீரமைக்கப்படவுள்ளன. வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும், சதாரண மக்களின் வைப்புக்களே உள்ளன. அந்த வைப்புகளைத் தான் வங்கிகள் அரசுக்குக் கடனாக வழங்கியுள்ளது.

அரசின் இந்த முயற்சியை ஏற்கனவே இலங்கையில் உள்ள இரண்டு தனியார் முன்னணி வங்கிகள் முழுமையாக நிராகரித்துள்ளன. வங்கிகள் ஆட்சியாளர்களின் கோரிக்கையை ஏற்காது விட்டால் நாட்டின் பொருளாதாரத்தினை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அச்சுறுத்தல் விடுத்திருந்தார். ஆனால் உண்மையில், மக்களின் பணமே வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. அந்தப் பணத்தினை ஆட்சியாளர்கள் திருடியும், சிதைவடையவும் செய்துள்ளது. தற்போது வைப்பினை குறைப்பதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். இதனால் வங்கிக் கட்டமைப்புக்குப் பெரும் அபாயம் ஏற்படும் நிலையொன்று உருவாகியுள்ளது. இதனைத் தவிர்க்க முடியாத சூழல் உருவெடுத்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அரசுக்கு 96 சதவீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, 3500 பில்லியன் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது. அந்தப் பணத்தினை இந்த ஆட்சி தள்ளுபடி செய்வதற்கு பார்க்கின்றது. அந்தப் பணம் தொழிலாளர் வர்க்கத்தின் பணமாகும்.

மாதாந்தம் தனியார் ஊழியர் ஒருவரிடமிருந்து ஊழியரின் பங்களிப்பில் 8 சதவீமும், தொழில் வழங்குநரின் பங்களிப்பில் 12 சதவீதமுமாக 20 சதவீதமான உழைப்பு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வருகின்றது. இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினது பணம் இல்லை. பொதுமக்களின் பணம் தான் உள்ளது. இந்தப் பணத்தையே தள்ளுபடி செய்வதற்கு பார்க்கின்றார்கள். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை முறியடிக்க வேண்டியது கட்டாயமாகின்றது - என்றார்.

## வடமராட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று முன்தினம் இரவு வீதித் தடைகளைப் போட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

வடமராட்சி கிழக்கு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு அண்மித்த வலிக்கண்டிப் பகுதியில் இச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இரவு 11.30 மணியளவில் மணற்காட்டுப் பகுதியிலிருந்து பருத்தித் துறை பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் சோதனையிடுவதற்காக மறித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினின்சைகையை உதாசீனம் செய்து வாகனத்தை நிறுத்தாது தொடர்ந்து பயணிக்க முற்பட்ட டிப்பர் வாகனம் தப்பிக்க முயற்சித்துள்ளது.

டிப்பர் தன்மீது மோதி விடாமல் இருக்க பாய்ந்து வீழ்ந்ததில் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்தார்.

உடனே அதிரடிப்படையைச் சேர்ந்த மற்றொருவர் டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார். துப்பாக்கி ரவை டிப்பரின் பின் சக்கரத்தைத் தாக்கியதில் அது காற்றுப் போய் டிப்பர் நிறுத்தப்பட்டது.

டிப்பரின் பின் பகுதியில் இருந்த இருவர் தப்பிச் செல்ல, சாரதி கைது செய்யப்பட்டார்.

இதன் பின் டிப்பரை சோதனையிட்ட போது அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தப்பட்டது கண்டறியப்பட்டது.

டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் டிப்பரையும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சந்தேகநபரை பருத்துறை நிதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிசார் மேற்கொண்டு வருவதுடன் தப்பித்துச் சென்ற இருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தில் படுகாமடைந்த விசேட அதிரடிப் படை நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (03)

## 2048ஐ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த உரையில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அக்கட்சியை ஆதரிக்கும் உங்கள் அனைவருக்கும் உரையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கடந்த 03 தசாப்தங்களாக நாடு கடுமையான பொருளாதார வீழ்ச்சியில் இருந்த நேரத்தில் நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றேன். நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்து, உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததோடு, மக்கள் வீதிகளுக்கு இறங்கியிருந்தனர். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இந்த நாட்டின் ஜனநாயக கட்டமைப்பையும், நாடாளுமன்றத்தையும் சிதைக்க சிலர் முயன்றனர்.

தற்போது நாட்டின் பொருளாதாரம் மீண்டும் ஸ்திரத்தன்மை அடைந்துள்ளது. உணவுத் தட்டுப்பாடு இல்லை. மேலும் நாட்டில் ஜனநாயக கட்டமைப்பு செயல்படுகிறது. அச்சுறுத்தல்கள் இன்றி நாடாளுமன்றம் செயல்படுகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய பணியை தடையின்றி மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நான் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க முன்னர், ஒரு விடயத்தைப் பற்றி சிந்தித்தேன். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைப் பற்றி சிந்திக்கும் கட்சி. ஐக்கிய தேசியக் கட்சி ஒரு கொள்கை அரசியலில் இருக்கும் கட்சி. நாங்கள் அதனைவிட்டு விலகவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வது அவசியம், உலக வங்கியின் உதவி தேவை. நாம் 07 பில்லியன் டொலர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் 2020 தேர்தல் விஞ்ஞாபனத்தில், அன்று நாம் குறிப்பிட்டிருந்தோம்.

கட்சி என்ற வகையில் நாங்கள்தான் அந்த உண்மைகளை குறிப்பிட்டோம். மற்ற அனைவரும், பொருளாதார பிரச்சினை இருப்பதை அறிந்து, நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை அளித்தனர்.

அதன் விளைவு என்ன, உண்மையைக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சி இறுதியாக தேசியப் பட்டியலில் வீழ்ந்தது. கசப்பானாலும் உண்மையை மக்களுக்குச் சொல்வதே எங்களின் கொள்கையாகும். அதனால் நாங்கள் அதிலிருந்து பின்வாங்கவில்லை.

2020 மற்றும் 2021 இலும் எங்களின் இலக்கு அறிவிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டு, இந்தப் பிரச்சினை தீவிரமடைந்தபோது, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுமாறு அவருக்கு ஆலோசனை வழங்கினேன்.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்த போது எதிர்க்கட்சியின் ஏனைய குழுக்கள் கலந்துரையாடலை புறக்கணித்த போதும் நானும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் எதிர்க்கட்சியில் இருந்து கலந்து கொண்டோம்.

எனது முயற்சி அரசியல் அல்ல, நாட்டின் பொருளாதாரத்தை முறையாகக் கையாள்வதும், மக்களுக்கு நிவாரணம் வழங்குவதும் ஆகும். எனவே நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பலம் என்னிடம் இருப்பதாகவும், எனக்கு ஆதரவளிக்கும் அமைச்சர்களுடன் இணைந்து செயற்பட்டு அந்த பெறுபேறுகளை அடைய முடியும் என்ற நம்பிக் கையினால் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

அந்த நம்பிக்கை எனக்கு இருந்ததற்கு முக்கிய காரணம், 2001 இல் அரசாங்கம் கவிழ்ந்தபோது, பொருளாதாரத்தை மீட்டெடுத்தது மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த முடிந்ததுதான். 2015 இல், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது, பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், முதன்மை வரவு செலவுத்திட்ட மேலதிகத்தைப்பெறவும் ஒரு வாய்ப்பு கிடைத்தது.

எனவே, இந்தப் பொருளாதார நெருக்கடியை என்னால் எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அப்படியானால், இந்த நேரத்தில், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதோடு, அரசியல் ஸ்திரத்தன்மையையும் உருவாக்குவதற்கான வாய்ப்பு எங்களுக்கு கிடைத்துள்ளது.

தற்போது நாடாளுமன்றம் இயங்கிவருகிறது. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின்படி செயல்படுபவர்கள் பலர் உள்ளனர். எனவே, இதற்கு எனக்கு உதவிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்கும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் காரணமாகவே நாம் முன்னோக்கிச் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. மேலும் கடந்த வெள்ளிக்கிழமை, இந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகளினால் அங்கீகரிக்கப்பட்டது.

அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோரும் ஆதரவு வழங்கினர். அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

இப்போது நாம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும். அதற்கு அவசியமான சட்டதிட்டங்களைக் கொண்டு வந்து 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வர நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நான் அதில் திருப்தியடையவில்லை.

எமக்கு இந்தப் பழைய பொருளாதார முறையுடன் இனியும் முன்னோக்கிச் செல்ல முடியாது. மொத்தத் தேசிய உற்பத்தியை ஆண்டுக்கு 6% - 7% என்ற அளவில் விரைவாகக் கொண்டு வரக் கூடிய பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும். என்னிடம் இரண்டு எடுத்துக்காட்டுகள் உள்ளன.

ஒருவர் டி.எஸ். சேனநாயக்காவின் கீழ், ஆசியாவின் இரண்டாவது வலுவான பொருளாதாரத்தை நாங்கள் கொண்டிருந்தோம். அப்போது எம்மால் இங்கிலாந்துக்குகடன் கொடுக்க முடிந்தது. ஜே.ஆர் ஜெயவர்தனவின் கீழ் நாம் திறந்த பொருளாதாரத்துடன் முன்னேறினோம். திறந்த பொருளாதாரத்தை உருவாக்கும் இரண்டாவது பயணத்தை இலங்கைதான் தொடங்கியது. அதன் பிறகுதான் சீனா அதனை நோக்கி வந்தது.

எனவே இந்தப் பின்னணியில் இலங்கையை மீண்டும் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். பொருளாதாரத்தில் யார் கீழ்மட்டத்தில் இருக்கிறார் கள் என்பதில் நாம் ஆப்கானிஸ்தானுடன் போராட முடியாது. எனவே நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

முன்னேறிய பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அன்று ஜே.ஆர் ஜெயவர்தன செய்தது போல், நாம் பல புதிய திட்டங்களை முன்னெடுத்து புதிய பொருளாதாரத்தில் இணைய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நமக்கு எதிர்காலம் இல்லை. நாம் சிந்திக்க வேண்டியது நமது எதிர்காலத்தைப் பற்றி அல்ல, நாட்டின் இளைஞர்களின் எதிர்காலத்தைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்.

2048 இல் சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் போது, முன்னேறிய பொருளாதாரம் கொண்ட நாடாக நாம் மாற வேண்டும். இந்தியா அந்த இலக்கை 2047 இல் வைத்துள்ளது. சீனா 2049 அந்த இலக்குகளை அடைய உழைக்கிறது. 2048 ஆம் ஆண்டை இலங்கை அபிவிருத்தி ஆண்டாக மாற்ற வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்காக இந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புகிறோம். அந்த புதிய பொருளாதாரம் மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரமாக இருக்க வேண்டும். சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட திறந்த பொருளாதாரமாக இருக்க வேண்டும்.

பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் குறிப்பாக ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்ட போட்டி பொருளாதாரமாக இருக்க வேண்டும். நாங்கள் அங்கு செல்ல முயற்சிக்கிறோம். எனவேதான் அனைவரின் ஆதரவையும் கோருகிறோம்.

குறுகிய கால அரசியல் பற்றி சிந்திக்க வேண்டாம். இன்று நாளையல்ல, 2048ஐப் பற்றி சிந்தியுங்கள். நாட்டை முன்னேற்ற வேண்டும். இன்று, நாளை என நினைத்து பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளோம், மீண்டும் நாடாளுமன்றத்திற்கான மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்ள இந்த புதிய பாதையில் செல்ல வேண்டும்.

எனவே, குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் உங்கள் அனைவருக்கும், நாங்கள் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் கட்சியாக இருப்போம் என்று நான் பரிந்துரைக்கிறேன். நாம் புதிதாக சிந்திப்போம். இந்த நாட்டின் பழைய அரசியல் செயல்முறையை மாற்றும் கட்சியாக நாம் மாறுவோம். அதைத்தான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுமன்றம் மீதான மக்களின் ஆதரவை மீண்டும் பெற்றுக்கொள்ள இந்த புதிய பாதையில் செல்ல வேண்டும். எனவே, குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் உங்கள் அனைவருக்கும், நாங்கள் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் கட்சியாக இருப்போம் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

நாம் புதிதாக சிந்திப்போம். இந்த நாட்டின் பழைய அரசியல் செயல்முறையை மாற்றும் கட்சியாக நாம் மாறுவோம். அதைத்தான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் அங்கீகப்பட்டுள்ள நிலையில், அதனை முன்னெடுத்துச் செல்ல எண்ணியுள்ளோம்.

நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமாயின், நாம் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். முதலாவது நாட்டில் உள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இது குறித்து பேச்சு நடத்தி வருகிறோம். இந்த வருட இறுதிக்குள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது. பெரும்பான்மை சிங்கள மக்களையும், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். இரண்டாவது இந்த நாட்டில் அரசியல், பொருளாதார முறைமையில் மாற்றம் வேண்டும் என்று இளைஞர்கள் கோருகின்றனர். நாம் இதனை செவிமடுக்க வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதற்காக பலகட்டங்களாக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கும், மேற்பார்வைக் குழுவிற்கும் தலா ஐந்து இளைஞர்களை நியமிக்க எதிர்பார்த்துள்ளோம். இந்தப் பணிகளை மே மாதத்தில் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

கருஜயசூரியவின் ஆலோசனைக்கமைய மக்கள் சபைகளை உருவாக்குவதற் காக அதற்கான சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். நாம் அனைவரும் உடன்பாட்டுடன் புதிய பொருளாதார முறைமையை ஏற்படுத்துவோம். புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவோம். நாம் முன்னோக்கிப் பயணிப்போம்.

அதனால் நான் இன்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களிடம் இந்த புதிய பயணத்தை ஆரம்பிப்போம் என்று கோரிக்கை விடுக்கின்றேன். கடந்த வாக்கெடுப்பின் போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் வாக்களிப்பைப் புறக்கணித்தனர். திறந்த பொருளாதார முறைமையை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். எனவே, வேற்றுமைகளை மறந்து முழு நாடாளுமன்றத்தில் அரசாங்கமாக பணியாற்றுவோம் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகிறேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாயின், தயவுசெய்து இந்த பொறிமுறைக்குள் வந்து விசேடமாக நாடாளுமன்றத்தில் ஒரு அரசாங்கமாக நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம். இடதுசாரி கட்சிகள் தமது கொள்கைகளுக்கமைய இந்த நடைமுறையை பின்பற்றமாட்டோம் என்று கூறியுள்ளனர்.

நாம் தற்போது எதிர் காலத்தை நோக்கிப் பார்க்க வேண்டும். புதிய வேலைத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். புதிய வேலைத் திட்டங்களுடன் அனைவரும் இணைந்துகொள்ளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன். தொழிற்சங்கங்கள், ஏனைய அமைப்புக்கள் என அனைவரையும் இந்த வேலைத் திட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு நான் அழைப்பு விடுக்கிறேன்.

புதிய வேலைத் திட்டங்கள் குறித்த அமைச்சரவையின் யோசனைகளை, நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகளிடம் சமர்ப்பித்து, மக்கள் சபையுடனும் கலந்தாலோசிப்போம். இதற்கான பரந்த இணக்கப்பாட்டை எட்ட விரும்புகிறோம். அப்படியாயின், எமக்கு அச்சமின்றி முன்னோக்கிச் செல்ல முடியும்.

இது 25 ஆண்டுகால வேலைத் திட்டம். இந்த 25 ஆண்டுகால வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்பி, மேம்படுத்துவோம் என்று அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன். இதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து எனது உரையை நிறைவு செய்கிறேன் - என்றார்.

## ஊழல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

'வேலைத்தளத்தில் ஆரம்பிக்கும் தாய் நாட்டின் போராட்டம்' என்ற தொனிப் பொருளின் கீழ் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

மாளிகாவத்தை - பீ.டி. சிறிசேன மைதானத்துக்கருகிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் பேரணி ஆரம்பமாகி பின்னர் பேரணி ஏ.ஈ.குணசிங்கபுற மைதானத்தை சென்றடைந்ததைத் தொடர்ந்து கூட்டம் ஆரம்பமானது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளான மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கை முஸ்லிம் காங்ரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் உள்ளிட்டவையும் இந்த மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தன.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மற்றும் பதுளையில் வெற்றிகரமாக இரு மே தினக்கூட்டங்களை நடத்தியுள்ளது. உழைக்கும் தொழிலாளர்கள் செறிந்து வாழும் மலையகத்திலும் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாம் பதவிகளுக்காக அரசியல் செய்பவர்கள் அல்ல. எமது அரசியலின் நோக்கம் முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதேயாகும். அதற்காகவே அரசியலில் ஈடுபடுகின்றோம். தற்போது ஊழல், மோசடியாளர்களே ஆட்சியமைத்துள்ளனர். அதன் காரணமாகவே உள்நாட்டுக்கு அப்பால் சென்று, வெளிநாடுகளிடம் இலஞ்சம் கோரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமக்கு ஒரு போதும் இவ்வாறான ஆட்சியுடன் இணையும் எண்ணமில்லை. மாறாக ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே நாம் ஆட்சிக்குச் செல்வோம். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும் அவரது ஆட்சிக் காலத்தில் இரு சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருக்கின்றார். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மக்களுக்கான சலுகைகளை நீக்கவோ, நிவாரணங்களை வழங்காமலோ இருக்கவில்லை. ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் அவ்வாறல்ல. எனவேதான் நாணய நிதிய ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பில் நாம் பங்கேற்கவில்லை.

உலகில் முதன்மையான நாடாக இலங்கையை மாற்றுவதே எமது இலக்காகும். எனவே இன , மத பேதமற்ற தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஆட்சி எம்மால் அமைக்கப்படும். இம்முறை மே தினத்தில் எமது சபதம் யாதெனில் ராஜபக்ஷர்களைப் பாதுகாக்கும் ஆட்சியை வீழ்த்துவதேயாகும்.

அத்தோடு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மக்களுக்கு சாதகமானதாக ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் புதுப்பிக்கப்படும்.

அதேநேரம், எமது

(03ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir








## ஊழல்.....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியில் யாரும் இரட்டை நிலைப்பாட்டுடன் இல்லை. அவ்வாறு இரண்டு நிலைப்பாட்டுடன் இரண்டு இடங்களில் கால்களை வைத்திருப்பவர்களுக்க ஒரு விடயத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

இரண்டு இடங்களில் கால்களை வைத்திருப்பவர்கள் தாராளமாக எம்மிடத்திலிருந்து விலகிச் செல்ல முடியும். அதற்கு எந்தத் தடைகளையும் நாம் விதிக்கப்போவதில்லை - என்றார்.

## பொருளாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களின் உரிமைகளை பாதுகாத்துள்ளோம். வெற்றியை காட்டிலும், தோல்வியின் போது உழைக்கும் மக்கள் எமக்கு ஆதரவளித்துள்ளார்கள.

வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு பொதுஜன பெரமுன அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் நாட்டில் தற்போது ஜனநாயகம் மற்றும் சட்டம், ஒழுங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஜனநாயகத்துக்கு அமையவே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

மே தினத்துக்கு பின்னர் புதிய இலக்கு நோக்கி அனைவரும் செயற்பட வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் சட்டமூலங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் - என்றார்.

## அரகலயவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரையில் நடத்தப்பட்டது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரகலயவின் இலக்கு இன்னமும் முழுமையாக நிறைவடையவில்லை. எமது பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு இதுவரையில் வழங்கப்படவில்லை. ஜனநாயகம் இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. திருடர்கள் திருடிய நிதி இன்னமும் நாட்டுக்கு கொண்டு வரப்படவில்லை. வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதி மீட்கப்பட வில்லை.

ரணில், ராஜபக்ஷ குழுவினர் மீண்டும் அதிகாரத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கின்றார்கள். உழைக்கும் வர்க்கத்தினரால் மாத்திரமே இந்தப் போராட்டத்தினை வெற்றியடையச்செய்ய முடியும்.

தற்போதைய நிலைமையை தோற்கடிப்பதற்கு முன்வருமாறு அனைத்து அரசியல் பிரமுகர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுகின்றோம். தற்போதைய ஆட்சியாளர்களின் சூழ்ச்சியை முறியடித்து எமக்கான அரசியல் பாதையை உருவாக்குவதற்கு முயற்சிப்போம்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் உள்ள தரப்பினருக்கும், அதேபோன்று நாடாளுமுன்றத்திற்கு வெளியில் இருந்து போராடும் அனைத்து தரப்பினருக்கும் ஒன்றிணைந்த போராட்டத்தில் இணையுமாறு அழைப்பு விடுகின்றேன்.

சில காலங்களுக்கு மாத் திரம் இடைக்கால ஆட்சியொன்றை உருவாக்குவோம். அவ்வாறு ஸ்தாபிக்கப்படும் இடைக்கால ஆட்சியில் எதிர்க்கட்சியில் உள்ள அனைத்துப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க வேண்டும். இடைக்கால ஆட்சியில் மக்களும் அங்கம் வகிக்க வேண்டும்.

அதேநேரம், ஊழல், மோசடிகளுடன் உள்ள ஆட்சியாளர்களைத் தோற்கடிக்க வேண்டும். அதன் பின்னர் புதிய அரசமைப்பினை உருவாக்கவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை எமக்குத் தேவையில்லை. யாரோ ஒருவர் எமது வாழ்க்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பில் புதிய தேர்தல் முறைமை, புதிய வரிக்கொள்கை ஆகியவற்றை உள்வாங்குவதோடு, இடைக்கால ஆட்சின் ஊடாக உடனடியாகத் தேர்தலுக்குச் செல்வோம் - என்றார்.

## பயங்கரவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேராசிரியர் சரித ஹேரத் , கலாநிதி நாலக கொடஹேவா, சட்டத்தரணி வசந்த யாபா பண்டார உள்ளிட்ட 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் சுதந்திர மக்கள் சபையின் மே தினக் கூட்டம் இடம்பெற்றது. கண்டி நகர சபைக்கருகில் மதியம் ஒரு மணியளவில் பேரணி ஆரம்பமாகி, சஹஸ் உயண கட்டடத்தை சென்றடைந்து, பிற்பகல் 2 மணியளவில் மே தினக் கூட்டம் ஆரம்பமானது.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்ததாவது:

நான் நாடாளுமன்றத்தில் இருந்த முழுமையான காலத்தில் தயாரிக்கப்பட்ட சட்டங்களில் மிகவும் மோசமானதும், பயங்கரமானதுமான சட்டமாக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் காணப்படுகின்றது.

நபர் ஒருவரை தடுத்து வைப்பதற்கான அதிகாரம், தடை உத்தரவுகளை பிறப்பிப்பதற்கான அதிகாரம், வரையறைகளை விதிப்பதற்கான அதிகாரம் இந்தச் சட்டத்தில் உள்ளது. அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் தொழிற்சங்கங்களின் இருப்பு அற்றுப்போகும்.

எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையும் பயங்கரவாத செயற்பாடாக அறிவிக்கப்படலாம். அதற்காக இருபது வருடங்கள் சிறைசெல்வதற்கு நேரிடும். அதனைத் தடுப்பதற்கான இயலுமை எமக்கு கிடைத்தது.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அந்தச் சட்டமூலத்தினை தற்போது காலவரையறை இன்றி தாமதப்படுத்தியுள்ளார். அவர் விருப்பமின்றியே அந்த அறிவிப்பை விடுத்துள்ளார். நாடு முழுவதும் ஏற்பட்ட எதிர்ப்பினால் ஆட்சியாளர்கள் ஓர் அடி பின்வைத்துள்ளனர் - என்றார்.

## தேவை எனில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மஹிந்த ராஜபக் தெரிவித்தார்.

'சவால்களைத் தோற்கடித்து இலட்சியங்களை வெற்றி கொள்வோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஆளுங்கட்சியான பொது ஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் கொழும்பு - பொரளையில் அமைந்துள்ள கெம்பல் மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்குக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கு மக்களாணை உண்டு என்பது இந்த மே தின கூட்டத்தில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்தவர்கள் என்றும் எம்முடன் உள்ளார்கள்.

எதிர்க்கட்சியின் அரசியல்வாதிகள் தமது அரசியல் பிரபல்யத்துக்காக எங்களை விமர்சிக்கிறார்கள். இதற்காக நாங்கள் கலக்கமடயப்போவ தில்லை. உரிய நேரத்தில் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுப்போம். உழைக்கும் மக்களின் தொழில் உரிமைகளை பாதுகாக்க என்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளோம்.

உழைக்கும் அடிமட்ட மக்கள் தான் எமக்கு என்றும் முன்னிலை ஆதரவு வழங்கியுள்ளார்கள். என்றும் ஆதரவு வழங்குவார்கள். தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை நான் முழுமையாக தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்துள்ளேன். அதிகாரத்துக்காக நான் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்படவில்லை.

எமது ஆட்சியில் தவறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதனை நாம் உணர்கின்றோம். அந்தத் தவறான தீர்மானங்களை தற்போது திருத்திக் கொண்டுள்ளோம்.

நாடு என்ற ரீதியில் பெரும் சவால்களை எதிர்கொண்ட வேளையில்தான் ஆட்சியதிகாரத்தை பொறுப்பேற்றேன். சவால்களை கண்டு, நானும் எனதுதரப்பினரும் ஒருபோதும் பின்வாங்கவில்லை. பல்வேறு சவால்களில் இருந்து மீள்வதற்கு மக்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சகல தொழிற்சங்கஞம் விளங்கிக் கொள்ள வேண்டும். மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாத தரப்பினர் தொழிற்சங்கத்தினரை தவறாக வழிநடத்துகிறார்கள். எம்மை திருடர், திருடர் என்று விமர்சிப்பவர்களின் பின்னணியை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

அதனால், எமது கட்சியின் தொழிற்சங்கத்தினர் அவர்களின் வலைக்குள் சிக்கி விடக்கூடாது. அவர்களில் சிலர் பூனையை வைத்து பலாக்கொட்டையை எடுப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். அதற்குதுணைபோகக்கூடாது.

சவால்களை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு பலமுறை அழைப்பு விடுத்தோம். அப்போது எவ ரும் முன்வரவில்லை. ஆனால் தற்போது கடுமையான எதிர்ப்புக்களை முன் வைக்கிறார்கள். அரசியல் செய்வதற்கு ஏதும் இல்லாதகாரணத்தினால் பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை தற்போது கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

நாட்டின் தேசியத்தை இல்லாதொழிக்க ஆரம்ப காலத்திலிருந்தே சர்வதேச சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்குப் பல விடயங்கள சான்று பகிர்க்கின்றன.

மக்களுக்காக ஆட்சியை கைப்பற்றவும், மக்களுக்காக ஆட்சியை விட்டுக் கொடுக்கவும் அரசியல்வாதிகள் பழகிக்கொள்ள வேண்டும். பொய்யான விமர்சனங்கள் எழுந்தபோது மக்களுக்காக அதிகாரத்தை விட்டுக் கொடுத்தோம்.

மக்கள் தற்போது உண்மையை விளங்கிக் கொண்டுள்ளார்கள். தேவையாயின் பலமிக்க சக் தியாக ஒன்றிணைந்து மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம். ஆனால் அதிகார மாற்றம் என்பது ஜனநாயக அடிப்படையில் தான் அமைய வேண்டும். மக்கள் ஆணை அற்றவர்கள் பிறிதொரு வழியில் அதிகாரங்களை கைப்பற்றவும் முனைகின்றார்கள் - என்றார்.

## கொழும்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரே இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புளூமெண்டல் தோட்டத்தைச் சேர்ந்தவர்களே துப்பாக் கிச் சூட்டில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் 4 பெண்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புதுறைமுகத்தின் 06 ஆவது நுழைவாயிலுக்கு அருகில், துறைமுகத்திற்குச் சொந்தமான இரும்புகளைத் திருட வந்தார்கள் என்று கூறப்படும் இருவரை விசாரணை செய்தபோது, குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் அங்கு வந்த அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளனர்.

அவர்கள் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கியைப் பறிக்க முயற்சித்த சந்தர்ப்பத்தில், மற்றுமொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் தனது துப்பாக்கியால் சுட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## எமது தயவின்றி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மே தினக் கூட்டம் இம்முறை கண்டியில் இடம்பெற்றது. 'ஒன்றிணைவோம் வலுபெறுவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் கண்டி பொதுச்சந்தை வளாகத்தில் மதியம் ஒரு மணிக்கு இக்கூட்டம் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அடுத்து ஆட்சியமைப்பது ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியாகவே இருக்கும். அவ்வாறில்லை எனில் எமது ஆதரவின்றி எந்தவொரு தலைவராலும் ஆட்சியமைக்க முடியாது. அடுத்து ஆட்சியமைப்பதற்கான பல்வேறு கொள்கைகள் எம்மால் தயாரிக்கப்பட்டுள்ளன.

அனைத்தின மக்கள் மத்தியிலும் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒற்றுமையின் ஊடாகவே இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக்க முடியும். மாறாக இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துவது முட்டாள்த்தனமான செயற்பாடாகும்.

இந்தியா, ஜப்பான், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளைப் பின்பற்றி நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்கு ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாட்டை பிளவுபடுத்தாத , இறையான்மையில் தலையிடாத சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு எமக்கு மிக அவசியமாகும்.

நாட்டில் நீதியையும் அமைதியையும் நிலைநாட்டும் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். எனவே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியால் மாத்திரமே நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

இனியொருபோதும் சுதந்திரக் கட்சி அதன் தனித்துவத்தன்மையை விட்டுக் கொடுத்து, எந்தவொரு கட்சியின் பின்னாலும் செல்லாது. கடந்த உள்ளூராட்சி தேர்தலில் நாம் தவறிழைத்து விட்டோம். அடையாளமில்லாத அரசியல் கட்சியொன்றுடன் ஒப்பந்தம் செய்துவிட்டோம்.

எவ்வாறிருப்பினும் தெய்வாதீனமாக இம்முறை தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ளமையால் நாம் தப்பித்துக் கொண்டோம். நாம் மட்டுமல் கட்சியும் தப்பித்துக் கொண்டுள்ளது. எமது ஆதரவாளர்களாகிய நீங்களும் தப்பித்துக்கொண்டுள்ளீர்கள். முழு நாடுமே தப்பித்துக்கொண்டுள்ளது - என்றார்.

## சாத்தியமான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிதைத்து தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரித்துகளை பூரணமாக பறித்து விடுவதற்காக திட்மிட்டு செயலாற்றி வருகிறது. வடக்கு, கிழக்கு எங்கும் தமிழர் நில அபகரிப்பு பரந்துபட்ட அளவில் தொடர்ந்து வருகிறது. தமிழர் தொன்மங்களைப் பிடுங்கி எறிந்து பௌத்த கலாசாரத்தை எமது தாயகத்தில் திணிப்பதற்கு வலிமையான செயற்பாடுகள் முனைப் படைந்துள்ளன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் தமது உழைப்பாளர்களை இழந்து தீரா வறுமையில் சிக்கித் தவிக்கின்றன. நீண்டகாலமாக சிறைப்பிடிக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளால் அவர்களது குடும்பங்கள் பொருளாதார அந்தரத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. கடலட்டைப் பண்ணைகளால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் சீரழிக்கப்படுகிறது. கனிய வளங்கள் கட்டற்று அள்ளிச் செல்லப்படுகின்றன. பயிர் விளையும் பல்லாயிரக் கணக்கான விளைநிலங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தேசவழமைச் சட்டங்களை கௌரவிக்காத வகையில் அழகக தொழில் நிலையங்கள் இராணுவத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றன. மூடப்பட்ட கைத் தொழிற்சாலைகள் மூடிய படியே உள்ளன.

போதிய தொழிலும் போதிய வருமானமும் இன்றி வறுமை மிகுந்த சமூகமாக வட கிழக்கு புள்ளி விவரங்களால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. போதையையும், வன்முறையையும் கட்டுப்படுத்த முடியாத வகையில் சட்டத்தின் ஆட்சி செயலிழந்து இருக்கிறது. மொத்தத்தில் அபிவிருத்திகள் எவையுமின்றி எல்லாவகையிலும் ஆக்கிரமிக்கப்பட்ட தேசமாக எமது தமிழீழ தேசம் உருவாக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சூழமைவில் தமிழ்த் தேசிய இனமாகிய நாங்கள் எமது வாழ்வுரிமையை, சுயநிர்ணய உரித்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும், சிங்கள பேரினவாதசக்திகளால் எங்கள் தேசம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட இனப்படுகொலையை தடுத்து நிறுத்தும் வகையிலும், ஈழத் தமிழர்களுக்கு பாரத தேசத்தின் நீதியோ, சர்வதேச சமூகத்தின் கருணையோ கிட்டவில்லை என்பது இன்றைய மே நாளின் முதன்மைச் செய்தியாகும்.

சிக்கல் நிறைந்த வலையென தமிழர் தேசத்தையும், தேசத்து தொழிலாளர்களையும் விசேடமாக தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பையும் அழிக்கும் வகையில் பின்னப்பட்டுவரும் அதிகார சதி வலைக்கெதிராக போராடுவதே தமிழர் தேசத்துக்குள்ள ஒரே வழியாகும் என நாம் திடமாக நம்புகிறோம். புத்திபூர்வமான செயல்முறை ஊடாக தமிழ் மக்களின் உரித்துக்களைப் பேண அயல் அரசுகளும், பன்னாட்டு அரசுகளும் தவறியே வருகின்றன. இந்நிலையில் இங்கே கூடியிருக்கும் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களும் தந்தை செல்வா அவர்கள் உணர்த்திய சுயாட்சி நோக்கிய பயணத்தை, ஒரு அஞ்சல் பரிமாற்ற போராட்டகாரர்களாக கையேற்க இருப்பதையே கிளிநொச்சியில் நடைபெறும் இம் மே நாள் வெளிப்படுத்தி நிற்கிறது.

அத்தகைய மே நாள் பிரகடனத்தை ஏற்று நின்றும், துணிந்து சென்றும் சாத்தியமான வழிமுறைகள் எல்லாவற்றிலும் போராடி தமிழர்களின் தாகமாகிய சுயநிர்ணய உரிமையை அடைந்தே தீருவோமென திடசங்கற்பம் கொள்கிறோம். தேச விடுதலைக்காய் உயிர்நீத்துப்போன ஆயிரம் ஆயிரம் இளவல்களுடைய கல்லறைகளின் மீதான சத்தியமாக இந்த இலட்சியப் பயணத்தைத் தொடர்வதே ஈழத் தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் பாதுகாப்புக்கு ஒரே வழிமுறையாகும் என்று இன்றைய மே நாள் பிரகடனம் செய்கிறது.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 2048 என்னும் கனவு

குதிரைக்குக் கரட் கட்டி விட்ட மாதிரி இப்போது இலங்கைக்கு 2048 என்கிற கரட்டைக் கட்டி விட்டிருக்கிறார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அடுத்த 25 ஆண்டுகளுக்குள் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே இலக்கு, அதை நோக்கி எல்லோரும் ஓடவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஆட்சிகள் நீண்டகால இலக்குகளை முன்வைத்துச் செயற்படுவது சிறந்ததுதான். நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதற்கு அது மிக முக்கியமானதும்கூட. மாறி மாறி வரும் ஆட்சிகள் அந்தத் திட்டங்களைத் தூக்கிக் கடாசிவிடாமல் தொடர்ந்து முன்னெடுத்தால் நாட்டை அபிவிருத்தியை நோக்கிக் கொண்டுசெல்ல முடியும். ஆனால், இலங்கையில் அப்படி நடப்பதில்லை. ஒரு கட்சி முன்வைக்கும் அபிவிருத்தித் திட்டங்களை அடுத்து ஆட்சிக்கு வரும் கட்சி தூக்கிக் கடாசிவிட்டு தானொரு திட்டத்தை முன்வைப்பதுதான் வழமை. அப்படியிருக்கும்போது அனைத்துத் தரப்புக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அபிவிருத்தித் திட்டத்தை, கொள்கையை தற்போதைய ஆட்சியாளர்கள் முன்வைக்கவேண்டிய பெரும் சவால் உள்ளது.

நாட்டின் முன்னாள் தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்க மற்றும் ஜே.ஆர்.ஜெவர்த்தன போன்றவர்கள் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல நிகழ்த்திய பொருளாதாரப் பாய்ச்சல்களைப் போன்று, தூர நோக்கோடு கூடிய திட்டமிடலைத் தான் இப்போது செய்கிறார் என்று ரணில் கூறுகின்றார். அந்தத் திட்டங்களுக்கே அனைத்துத் தரப்பினரது ஆதரவையும் அவர் கோருகின்றார். இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) ஒப்பந்தத்தை முன்வைத்தபோதும் அவர் இதேபோன்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார். தான் பதவியேற்றது முதல் 2048 என்கிற கரட்டை அவர் காவித் திரிகின்றார். ஆனால், அவரது அழைப்புக்கும் செயற்பாட்டுக்கும் இடையில் பெரும் முரண்பாடுகள் நிலவுகின்றன.

தனது இந்த 2048 கனவுக்காக முக்கியமாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களைத் தன்னோடு இணையுமாறு அவர் அழைப்பு விடுக்கின்றார். அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் என்கிற வகையில் அவரது அந்த அழைப்பு இருக்கின்றது. ஆனால், வெளியே அவரது கட்சியினரோ ஐக்கிய மக்கள் சக்தியை உடைத்து அதிலிருந்து பலரை ஆளும் தரப்புப் பக்கம் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றார்கள். சஜித் பிரேமதாசவை விமர்சிக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் சஜித்தோடு இருந்துவிட்டுப் பின்னர் ஆளும் தரப்புக்குத் தாவிய ரின் பெர்னான்டோ, சஜித்தைத் திட்டித் தீர்க்கிறார். அவர் ஒரு திறமையான தலைவரே அல்லர் என்கிறார். இவ்வளவையும் செய்துகொண்டு ஐக்கிய மக்கள் சக்தி ஆளும் தரப்போடு இணைந்து போகும் என்று ரணில் விக்கிரமசிங்க எப்படி எதிர்பார்க்கிறார்.

ஆக மொத்தத்தில், இலங்கை அரசியல்வாதிகளின் சொல்லுக்கும் செயலுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதில்லை என்பதைத்தான் ரணிலும் அவரது ஆளும் தரப்பும் மீண்டும் நிரூபித்து வருகின்றன. இந்த நிலையில் 2048 என்ற இலக்கை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்பது எப்படிச் சாத்தியமாகும்? மறுபுறத்தில் மே தின உரையில் மகிந்த ராஜபக்சவும் எப்போது நினைத்தாலும் அதிகாரத்தைத் திரும்ப எடுத்துக்கொள்வோம் என்கிறார். அவர் சொல்வதில் தவறில்லை. நாடாளுமன்றத்தில் அவரது கட்சிக்கே பெரும்பான்மை உறுப்பினர்கள் இருக்கும் நிலையில் அவர் எப்போது நினைத்தாலும் ஆட்சி ரணிலின் கையைவிட்டுப் போய்விடும். இத்தகைய பின்னணியில் 2048 கனவுகளுடன் ரணிலின் பயணம் நொண்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்றே படுகின்றது.

அரசியல்வாதிகளின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கும்போதுதான் இத்தகைய ஒன்றுபடுதல்களும் துரநோக்கு இலக்கை நோக்கி அனைவரும் ஒன்றாகப் பயணிப்பதும் நடக்கக்கூடியது. தனது உரையில் ரணிலே சொல்வதைப் போல இனியும் பொய் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. அதற்கு அரசியல்வாதிகளின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கவேண்டும்.

# இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் நுவரெலியாவில் நடந்தது!





இந்திய வம்சாவழியினரின் 200 ஆம் ஆண்டும் தொழிலாளர் தினமும் எனும் தொனியில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி இம்முறை உலக தொழிலாளர் தினமான மே தினம் நுவரெலியாவில் முன்னனியின் பொதுசெயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் தலைமையில் நுவரெலியா வாசிகசாலை கேட்போர் கூடத்தில் நேற்று (திங்கட்கிழமை)நடைபெற்றது.

நுவரெலியாதபால்நிலையத்துக்குமுன்பாககாமன்கூத்து நிகழ்வோடு பேரணி ஆரம்பமாகியது. நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள் முன்னாள் பிரதேச சபை மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

போராட்டகுணாம்சத்தை இழந்த எந்த சமூகத்தாலும் அதன் அடையாளத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

இலங்கையில்தனது 200 வருட அவலவாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருக்கும் எமது சமுதாயம் துரதிஷ்டவசமாக இன்று மறக்கப்பட்ட சமூகமாகவே வாழ்ந்து வருகிறது. ஒரு சமூகமாக மாத்திரமன்றி தொழிலாளர்களாகவும் தமக்குறிய உறிமைகளுக்காக குரல் கொடுக்காத சமூகமாக நாம் ஆக்கப்பட்டுவிட்டோம் என முன்னனியின் பொதுசெயலாளரும் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமானசதாசிவம்தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்துள்ளவைவருமாறு-

200 வருடங்கள் என்பது எவ்விதத்திலும் பெருமை கொள்ளும் வரலாற்றை எமக்கு தரவில்லை மாறாக ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது நாம் எவ்வாறு பின்தள்ளப்பட்டுள்ளோம் என்பதை காட்டுகின்றது.

தென்கிழக்கு ஆசியாவிலேயே பலமிக்க தொழிற்சங்க அமைப்பாக எமது மக்கள் அணிதிரண்ட வரலாறு 50 - 60 களில் நிலவியது அன்றையதொழிற்சங்கபலம் எமக்கு சமூக பலமாகவும் இருந்தது. ஆனால்தெளிவற்ற கொள்கைகள்கொண்டஅடுத்தடுத்த தலைமைகளால் எமது சமூகம் பலம் இன்று சிதறிக் கிடக்கின்றது.

எமது வாழ்வாதார தேயிலை உற்பத்தியும் நலிவடைந்து வருகின்றது. தொழில் வாய்ப்பிற்காக எமது மக்கள் வெளிமாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதே நிலை தொடர்ந்தால் இன்னும் 10 - 20 ஆண்டுகளில் நாம் தனி தனி நபர்களாக வாழும் நிலையே ஏற்படும். - என்றார்.

# பஸ் கட்டணத்தைக் குறைக்க முடியாது இலங்கை தனியார் பஸ் சங்கம் அறிவிப்பு

எரிபொருள் விலை குறைப்புக்கு அமைய பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது. ஜூன் மாத வருடாந்த கட்டண திருத்தத்தின் போது கட்டணத்தை குறைக்க எதிர்பார்த்துள்ளோம் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலாகும் வகையில் சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலையை 135 ரூபாவினாலும், ஒரு லீற்றர் டீசலின் விலையை 15 ரூபாவினாலும் குறைத்துள்ளது.

இந்த விலை குறைப்புக்கு அமைய பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது. அண்மையில் 12.9 சதவீதத்தால் பஸ் கட்டணம் குறைக்கப்பட்டது. எதிர்வரும் மாதம் வருடாந்த கட்டண திருத்தத்தின் போது பஸ் கட்டணத்தை திருத்தம் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

பஸ்களின் உதிரிபாகங்களின்விலையைகுறைத்தால் அதன் பயனை மக்களுக்கு எம்மால் வழங்க முடியும். பஸ்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் கோட்டாவை அதிகரித்துக் கொடுக்குமாறு மின்சாரத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம். - என்றார்.

# வடக்கில் காணியற்ற ஒரு லட்சம் குடும்பங்களுக்கு விரைவில் காணி

## ஆளுநர் ஜீவன் உத்தரவாதம்



வட மாகாணத்தில் காணி அற்ற, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சுமார் ஒரு லட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடமாகாணத்தில் காணி அற்ற வறுமை நிலையில் வாழும் குடும்பங்களுக்கான நன்கொடைக் காணிகள் வழங்கும் செயற்பாடுகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன.

அதேபோன்றுகாணிஅற்ற அரச உத்தியோகத்தர்களுக்கும் குத்தகைக்கு மற்றும் வீடுகளை கட்டுவதற்கு காணிகள் வழங்கும் செயற்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

மாகாணத்தில் சுமார் 4 லட்சம் மரங்கள் ஒவ்வொன்றிற்கும் 1:5 என்ற விகிதத்தில் மரங்களைநாட்டுவதற்குபுதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது வழங்கப்படும் காணி துண்டுகளில் ஏற்கனவே உள்ள பயன்தரும் மரங்கள் அல்லது காணி துண்டுகளில் நடுகை செய்யும் பயன்தரும் மரங்களுக்கான இலவச ஆலோசனைகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

குறித்த திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மாகாண அமைச்சுக்களின் அதிகாரிகள் உள்ளூர் ஆட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச குழுக்கள் இணைந்து பணியாற்றுவதற்கான செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆகவே இதன் மூலம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஏழைக் குடும்பமும் 10 பேர்ச் அரச காணிக்கு உரிமையாளராக மாறுகின்ற நிலையில் அவர்களுக்கான பயன் தரும் மரங்களை அவர்களே அறுவடை செய்யும் உரிமம் வழங்கப்படும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

# ஸ்கை டைவிங் சாகச விளையாட்டு தாமரை கோபுரத்தில் நடத்தப்பட்டது!

உலகப் புகழ் பெற்ற சாகச விளையாட்டான ஸ்கை டைவிங், இலங்கையில் அண்மையில் இடம்பெற்றது.

தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமான தாமரை கோபுரத்தில், இந்த சாகச விளையாட்டு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சுற்றுலாத் துறையை சர்வதேசமட்டத்தில் மேம்படுத்தும் வகையில், உலகப் புகழ்பெற்ற சாகச விளையாட்டான ஸ்கை டைவிங் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

சாகசவிளையாட்டுக்காக, இரண்டு ஸ்கை டைவிங் சாம்பியன்கள் அண்மையில் இலங்கை வந்திருந்தனர்.

நிகழ்வில் முதல் முறையாக, தாமரை கோபுரத்தில் இருந்து கீழே குதித்து பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தினர்.

இந்தச் செயற்திட்டம், சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் எனவும், இதன் மூலம் உலகெங்கிலும் உள்ள மக்களின் இலங்கை மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் எனவும், கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் சுயரூபம் வெளிப்பட்டுள்ளது!

## ரங்கே பண்டார தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானங்களை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொள்ள வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்றாலும் முழு நாடாளுமன்றமும் தீர்மானங்களை தெரிந்து, அதற்காக ஆதரவளிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகத்தை மதித்து செயற்பட்டார்.

ஆனால், பிரதான எதிர்க்கட்சி வாக்களிப்பில் கலந்துகொள்ளாததன் மூலம் அவர்களின் சுயரூபம் வெளிப்பட்டுள்ளது என ஐக்கிய தேசிய கட்சி பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கியதேசியகட்சிதலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பொருளாதாரநெருக்கடிக்குத் தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்துள்ளது. நாணய நிதியத்தின் தீர்மானங்களை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்காமல் அதனை ஜனாதிபதிக்கு அனுமதித்துக்கொள்ள முடியும்.

இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேசநாணய நிதியத்துக்கு சென்று உதவி பெற்றிருக்கிறோம். ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிவித்து அனுமதி பெறப்படவில்லை.

என்றாலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனநாயகத்தை மதித்து, நாணய நிதியத்தின் தீர்மானங்களை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதுடன், அனைவரும் நாணய நிதியத்தின் உதவியுடன் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இவ்வாறு செயற்பட்டார்.

அத்துடன், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேசநாணயநிதியத்துக்கு செல்லவேண்டும் என தாங்களே ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வந்ததாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும், தெரிவித்து வந்தது.

தற்போது நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதற்கு ஆதரவளிக்காமல் நாடாளுமன்றத்தில் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் அவர்கள் ஒளிந்துகொண்டனர். அரசியல் பொறாமையே இதற்குக் காரணமாகும்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அரசாங்கத்துக்குக்கிடைக்காது என்றே இவர்கள் நம்பி இருந்தனர். அதனாலேயே நாணய நிதியத்துக்கு செல்லுமாறு தெரிவித்து வந்தனர். தற்போது நாணய நிதியத்தின் உதவி கிடைத்த பின்னர், மக்களின் பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதனை பொறுத்துக்கொள்ள முடியாமலேயே வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

மக்களுக்கு நெருக்கடி இருக்கும் வரைக்குமே இவர்களுக்கு மக்கள் முன் செல்லமுடியும். அரசியல் செய்ய முடியும். அதனால் இவர்களின் திட்டங்கள் தற்போது படிப்படியாக தோல்வியடைந்து வருகின்றன. இதன் காரணமாக மக்களும் இவர்களில் இருந்து விலகி, ஜனாதிபதி மீது நம்பிக்கை ஏற்படுத்திக்கொண்டுவருகின்றனர்.



அதனால்தான் ஐக்கிய மக்கள் சக்தி இடம்பெற இருக்கும் மே தின கூட்டத்தையும் வழமையாக அதிக மக்கள் கலந்துகொள்ள முடியுமான இடத்தில் நடத்தாமல், கொழும்பில் ஏ.ஈ.குணசிங்க என்ற சிறிய மைதானத்தில் நடத்தத் தீர்மானித்திருந்தனர்.

அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியின் செல்வாக்கும் குறைந்து வருகிறது. அதனால் அவர்களும் சிறியதொரு இடத்திலேயே மே தின கூட்டத்தை நடத்தியிருந்தனர். இவ்வாறு 2024இல் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்போது இந்த கட்சிகள் அனைத்தும் பலவீனமடைந்துசெல்லும். - என்றார்.

# இ.தொ.காவின் மே தினம் ஹற்றனில் நடைபெற்றது!

தோட்டவாரியாக இம்முறை மே தின கூட்டம், நிகழ்வை எளிமையான முறையில் - உரிய நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்தது.

அந்தவகையில், மலையக பெருந்தோட்ட பகுதிகளை சுற்றியுள்ள முக்கிய நகரங்களில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அலுவலகங்களிலும், அங்கத்தவர்கள் அமைந்துள்ள தோட்டங்களிலும் மேதின நிகழ்வுகள் நடைபெற்றன.



ஹற்றனில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர்காங்கிரஸின் தலைமைக் காரியாலயத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர்களான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் புகைப் படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு, இலங்கைதொழிலாளர்காங்கிரஸின் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணி பொது செயலாளர் அர்ஜுன்ஜெயராஜ், உறுப்பினர் தயாளன் குமார சுவாமி, ஹற்றன் டிக்கோயா நகரசபையின் முன்னாள் தலைவர் சடையன் பாலச்சந்திரன், தவிசாளர் எம்.ராமேஷ்வரனின் பிரத்தியேக செயலாளர் ராஜன், காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சமத்துவக் கட்சியின் சமத்துவ மே தினம் கிளிநொச்சியில் எழுச்சிபூர்வமாக நடந்தது!



அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம் எனும் தொணிப்பொருளில் சமத்துவக்கட்சியின் மேதின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று (திங்கட்கிழமை) பெருமளவான மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன் தலைமையில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் மாவட்டத்தின் பல்வேறு தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் சிவில் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் பொது மக்கள் என பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர்.

பலதொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். இங்கு உரையாற்றி சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார்,

நாட்டில் சுதந்திரத்தையும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உருவாக்குவதற்குப் பதிலாக அதற்கு எதிராகவே ஆட்சி நடத்தப்படுகிறது.

சுதந்திரத்துக்குப்பின்னர் நாடு சிந்திய கண்ணீரும் இரத்தமும் கொஞ்சமல்ல. இதிலிருந்து நாம் மீளவேண்டும். இனியும் சம்பிரதாயமான அரசியல் வாக்குறுதிகளை நாம் நம்ப முடியாது.

சம்பிரதாயமான மே தின நிகழ்வை நடத்துவதில் அர்த்தமில்லை. இன்று பிற நாடுகளிலும் சர்வதேச வங்கிகளிடத்திலும் அடமானமாகியுள்ள நாட்டில் நாம் போராடாமல் இருக்கமுடியாது. எமது போராட்டம் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானதாக இருக்கட்டும். மக்களின் விடுதலையை நோக்கியதாக அமையட்டும். - எனத் தெரிவித்தார்.

# காலி முகத்திடலில் நடந்த போராட்டத்துக்கு விசாரணை ஆணைக்குழுவை ஸ்தாபிக்குக

## ஜனாதிபதியிடம் பிரசன்ன ரணதுங்க கோரிக்கை



காலி முகத்திடலில் தோற்றம் பெற்ற போராட்டம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

மே 09 சம்பவம் தொடர்பில் அரசியல் தரப்பினர் வெளியிடும் கருத்துக்கள் இராஜதந்திரமட்டத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் தன்மையில் காணப்படுகிறது என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

மே 09 சம்பவம் தொடர்பில் அரசியல்வாதிகள் தற்போது புத்தகம் வெளியிடுகிறார்கள், பாதுகாப்பு பிரதானிகளின் மீதும், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். தவறான கருத்துக்களால் இராஜதந்திர மட்டத்தில் பாதிப்பு ஏற்படும்.

காலி முகத்திடல்களத்தில் தோற்றம் பெற்ற போராட்டம் (அரகலய) மற்றும் அதனை தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை வெளிப்படுத்த முழுமையான அதிகாரமிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

ஜனநாயகம் என்பதை முன்னிலைப்படுத்தி பயங்கரவாத செயற்பாடுகள் மாத்திரம் கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்றன.


நாட்டில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்கு எதிரான செயற்பாடுகள் மாத்திரமே இடம்பெற்றன. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இடம்பெற்றது என்பதை நாட்டு மக்கள் விளங்கிக்கொண்டுள்ளார்கள்.

போராட்டத்தில் முன்னிலையில் இருந்து செயற்பட்டவர்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசார மேடைகளில் உள்ளார்கள். - என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் பயணத்தைத் தொடர நான் தயார் இல்லை; மன்னிப்புக் கோரவேண்டும்

## வடிவேல் சுரேஷ் ஆக்ரோஷம்

பதுளை, மடுல்சீமை மக்களிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மன்னிப்புகோர வேண்டும். அவ்வாறு இல்லையேல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பயணத்தைதொடர்வதற்கு நான்தயாரில்லை. - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மேதினகூட்டம் பதுளையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றுகையிலேயே வடிவேல் சுரேஷ் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டில் தேசிய கொள்கைத்திட்டம் பற்றி பேசப்படுகின்றது. அவ்வாறு கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படும்போது மலையக பெருந்தோட்ட மக்கள் ஓரங்கட்டப்படுகின் றனர்.

இந்நிலைமையை இனியும் அனுமதிக்க முடியாது. எமது மக்களும் இலங்கை பிரஜைகள்தான். அவர்களுக்கு எதற்காக ஓரவஞ்சனைகாட்டப்படுகின்றது? இலங்கைமக்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளும் எமது மக்களுக்கும் வேண்டும்.

எமது மக்கள் பயங்கரவாதிகள் அல்லர். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் அல்லர். நாட்டின் வன்முறைகளில் ஈடுபட்டவர்களல்லர்.

நாடு மேம்பட உழைத்த அவர்களுக்கு ஏன் புறக்கணிப்பு? இன்னும் காணிஉரிமைஅற்றவர்களாக வாழ்கின்றனர்.

எங்கள் மக்களுக்கு உண்ண உணவில்லை, பாதுகாப்பாக வாழக் காணி இல்லை. மக்கள் இப்படி தவிக்கையில் எனக்கு கட்சி, சின்னம் என்பன முக்கியம் இல்லை.

தற்போதையசூழ்நிலைக்கமைய நாட்சம்பளமாக 3 ஆயிரத்து 250 ரூபா வழங்கப்படவேண்டும். பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

எனவே, அந்த தொகையை வழங்குமாறு கம்பனிகளுக்கு ஜனாதிபதி கட்டளையிட வேண்டும்.

அதேவேளை, எமது மக்களை செல்லாக்காசாகக் கருத வேண்டாம் என எமது கட்சி தலைவர் சஜித்திடம் கூறுகின்றேன். அவர் மடுல்சீமை கூட்டத்துக்கு வரவில்லை. ஆக மடுல்சீமைக்கு வந்து அவர் மக்களிடம் மன்னிப்புகோர வேண்டும். இல்லையேல் சஜித்துடன் எனது பயணம் தொடராது. - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் மே தினம் நல்லூரில் நேற்று நடந்தது





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சர்வதேச உழைப்பாளர் தின நிகழ்வுகள் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் மாலை 3 மணியளவில் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் நா.பார்த்திபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல்துறைத்தலைவர் கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின்தலைவர்வி.எஸ். சிவகரன், அரசியல்ஆய்வாளர் நிலாந்தன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் ஆர்வலர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மட்டக்குளியில் வல்லே சுரங்கவின் சகா போதை மாத்திரைகளுடன் கைதானார்!

பாரியளவிலானபோதைப் பொருள் கடத்தல்காரரான கமகேபிரதீப்சுரங்களனப்படும் வல்லே சுரங்கவின் சகா ஒருவர் மட்டக்குளியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்தபோதே இவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் விசேட அதிரடிப் படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 1,000 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 15 இல் வசிக்கும் 35 வயதுடைய அந்த சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்குளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.




## இன்சுலின் ஊசியை பலவந்தமாக ஏற்றி மனைவியைகொல்ல முயற்சி

### திருகோணமலையில் சம்பவம்

தனதுஇளம்மனைவிக்கு இன்சுலின் ஊசியைப் பலவந்தமாகச் செலுத்தி அவரைக் கொலைசெய்ய முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும்வைத்தியர்ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸின் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது.

அதிகப்படியான இன்சுலின் ஊசி செலுத்தப்பட்டதால் மயக்கமடைந்த வைத்தியரின் மனைவி ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

திருமணமாகியும் குழந்தை இல்லாத காரணத்தால் மனைவி, மருத்துவருடன் அடிக்கடி தகராறு செய்து வருபவர் என விசாரணைகளில்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், சந்தேக நபரான வைத்தியர் அடிக்கடி வீட்டுக்கு வருவதில்லை என்பதும் விசாரணைகளில் வெளிப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாகத் தருவிக்கப்பட்ட 836 கிலோ பீடி இலைகள் சிக்கின

### இருவர் கைது

புத்தளம், கற்பிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 836 கிலோவுக்கும் அதிக நிறையுடைய பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளைபிரிவினரால்ஞாயிற்றுக்கிழமை இரவு மற்றும் திங்கட்கிழமை அதிகாலை கற்பிட்டி, பராமுனை மற்றும் குடாவ கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இந்த பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமைஇரவு பராமுனை கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது சந்தேகத்துக்கு இடமான படகொன்றுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது குறித்த படகிலிருந்து 550 கிலோ 750 கிராம் பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 18 மற்றும் 23 வயதுடைய கற்பிட்டிபிரதேசத்தைச்சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, நேற்று அதிகாலை குடாவ கடற்கரையின் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த பீடி இலைகள்அடங்கிய 9 பைகள்மீட்கப்பட்டன.இவற்றுள் 286 கிலோ 200 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டன.

இந்நிலையில்836கிலோ 950கிராம்பீடிஇலைகளுடன் குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கட்டுநாயக்க சுங்க திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

## எதிர்காலத்தில் இலங்கையில் பெண் பொலிஸ்மா அதிபர்கள்!

எதிர்காலத்தில் பெண் பொலிஸ் மா அதிபர்களின் கீழ் பணியாற்ற பொலிஸார் தயாராக வேண்டும் என பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

லசந்த அழகியவன்ன தலைமையில் இந்தக் குழு கூடியது. ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், பொலிஸார் அன்றைய தினம் கணக்குக் குழுவுக்கு வரவழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரும்புக் கம்பியினால் தாக்கி புத்தளத்தில் ஒருவர் கொலை



புத்தளம் நுரைச்சோலைப் பொலிஸ் பிரிவிற்குற்பட்ட தழுவ பகுதியில் இரும்புத்தடியால்தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

30வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை கிரிக்கெட் மைதானத்தில் இருவருக்கும் இடையில் தகராறு இடம்பெற்றுள்ளதாகவும் இதன்போது உயிரிழந்தவரின் முகத்தில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் தாக்கப்பட்ட நபர் வீட்டிற்கு வராதமையின் காரணத்தால் குறித்த நபரை வீட்டு உறவினர்கள் தேடிவந்துள்ளனர்.

இதன்போது தாக்கப்பட்ட நபர் வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலுள்ள மணல் திடலில் சடலமாகக் காணப்பட்டார் எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்துக்கு நுரைச்சோலைப் பொலிஸார் மற்றும் தடவியல் பொலிஸார் நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது தலையில் பொல்லால் தாக்கிய காயங்களும் காலில் வெட்டுக் காயங்களும் காணப்பட்டன என தடயவியல் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த சந்தேக நபர் பதுங்கிவிட்டதாகவும் மோப்ப நாயின் உதவியைக்கொண்டுசந்தேக நபரைத் தேடும் பணியில் ஈடுபட்டுவருவதாகவும்பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நுரைச்சோலைப்பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்எனத் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தனது அடிப்படை அரசியல் உரிமைகளில் தமிழ்த் தேசம் என்றும் உறுதியாக இருக்கும்

## காங்கிரஸ், முன்னணி மே நாள் பிரகடனம்






தமிழ் தேசமானது - தனது அடிப்படையான அரசியல் உரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்திற்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் 2023 மே தினத்தில் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

இவ்வாறு தனது மே தினப் பிரகடனத்தில் தெரிவித்துள்ளது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும். திங்கட்கிழமை மல்லாவியில் இடம்பெற்ற அந்தக் கட்சியின் மே தினத்தில் வெளியிடப்பட்ட இந்தப் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பண்டைய இதிகாசங்கள் புனைந்துவிட்ட புரளிகளால் சிங்கள இனம் வழிதவறிச்சென்று தொடர்ந்தும்பேரினவாதச்சகதிக்குள்வீழ்ந்துகிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையில் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

இந்தக்கருத்தியற்குருட்டுத்தனத்தால்இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்ந்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தக் கருத்தாதிக்கம் பாடசாலைக் கலைத்திட்டங்களிலும், பல்கலைக்கழகங்களிலும், கருத்தியலாக ஊடுருவி நிற்கிறது.

சிறிலங்காவில் தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள், அனைத்துவிதமான இனத்துவ பாகுபாடுகளையும் ஒழித்தலை வலியுறுத்தும் ஐ.நா. பிரகடனத்தை (Convention on the Elimination of All Forms of Racial Discrimination) அப்பட்டமாக மீறி வந்துள்ளன. அதே அணுகுமுறையையே தற்போதைய அரசாங்கமும் பின்பற்றி வருகிறது. அரசாங்கத்தின் அத்தகைய மீறல்கள், சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆட்களைக் கைது செய்தல், தடுத்துவைத்தல், படையினரால் மேற்கொள்ளப்பட்ட நில ஆக்கிரமிப்புக்கள், மனிதப்புதைகுழிகள், வலிந்து காணாமற் போகச் செய்தமை, சட்டத்திற்கு புறம்பாக தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமை எனத் தொடர்ந்தன. அது இன்று கட்டமைப்புசார் இனவழிப்பாக தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது.

அரசாங்கமானது அவசரகாலச் சட்ட விதிகளின் படியும், பயங்கரவாதத் தடைச்சட்டமூலத்தின் வழியாகவும் தமிழ் மக்களைக் கைதுசெய்வதும், துன்புறுத்துவதும் தொடர்கதையாகவே உள்ளது. அதேவேளை, இக் கொடூரமான சட்டத்தின் மூலமே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதுடன், படையினருக்கும், காவல்துறையினருக்கும்மிதமிஞ்சியஅதிகாரத்தையும் வழங்கியுள்ளது. இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி மனிதவுரிமைச்செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற பணிகளை மேற்கொள்ளும் தமிழர்கள் மீது ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிங்கள அரசு தமிழருடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரித்து, இங்கு பயங்கரவாத பிரச்சினை மட்டுமே உள்ளதாகக் கூறி, போரை முடிவுக்குக் கொண்டு வந்து 14 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும், இன்றுவரை தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை தொடர்ந்தும் இருக்கிறது என்கின்ற நிலையை நாம் தக்கவைத்திருப்பதற்கான ஒரேயொரு காரணம், இந்த நாட்டின் பிரதான சட்டமாக இருக்கும் மூன்று அரசியலமைப்புக்களையும் தமிழ் மக்கள் நிராகரித்திருந்தமையேயாகும். இவ்வாறிருக்க, 1980 களில் இலங்கையை மையமாகக் கொண்டிருந்த அமெரிக்க - இந்திய பூகோளப்போட்டி காரணமாகவே இந்தியா தனது நலனை அடைவதற்காக தமிழர்களின் இனப்பிரச்சினையைக் கையிலெடுத்திருந்தது. 1987 இல் இலங்கையானது, .இந்திய நலன்சார்ந்து செயற்பட தயாரான நிலையில், இந்தியா தனது தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்தி, சிங்கள தரப்புடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர், எந்த ஒற்றையாட்சிக் கெதிராக தமிழ் தரப்பை பயன்படுத்தியதோ, அதே ஒற்றையாட்சிக்குள்ளான 13 ஆம் திருத்தத்தையேதமிழ்மக்களுக்கானதீர்வாக இலங்கை அரசு முன்வைத்திருந்த நிலையில், தமிழ்த் தரப்பை; இந்தியா கைவிட்டிருந்தது.

இந்நிலையில் அப்போதிருந்த தமிழ் தரப்புகளாலும் ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டம் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேர்மையான தலைமைத்துவத்தின் காரணமாக ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்கும் செயற்பாடுகள் அனைத்தும் தடுக்கப்பட்டிருந்தது. 2005 இன் பின்னர், வல்லரசுகளுக்கிடையிலான பூகோளப்போட்டி மீண்டும் இலங்கையில் தீவிரமடைந்திருந்த பின்னணியிலேயே ஒரு இனப்படுகொலையூடாக ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், இந்தியா மீண்டும் தனது ஆதிக்கத்திலுள்ள தமிழ்த் தரப்புக்களைப் பயன்படுத்தி, தமிழ் அரசியலை ஒரு துருப்புச்சீட்டாகக் கையாண்டு இலங்கை அரசோடு பேரம்பேசி வருகின்றது. இலங்கை, சீனாவின் விவகாரத்தில் இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் செயற்படுமானால், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ் தரப்புகளை பயன்படுத்தி, தமிழரின்அரசியலைஒற்றையாட்சிக்குள்ளான13ஆம் திருத்தத்திற்குள் முடக்குவதற்கும் இணங்கியுள்ளது.

'எல்லா மக்களும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். இந்நெறிமுறைகளின்படி, தமது அரசியல் நிலைப்பாட்டையும், பொருண்மியம் மற்றும் சமூக கலாச்சார விடயங்களையும் மேற்கொள்ளும் வழிவகைகளைத் தீர்மானிக்கும் உரித்துடையவர்களாக அவர்கள் இருப்பர்' என்று வியன்னா உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பிரகடனத்தில், மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலிப்பது மனிதவுரிமை மீறலாகவும், அவர்களது உரிமையினை முறைப்படி நிலைநாட்டுவதனை மறுதலிக்கும் செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் - தமிழர்கள் ஒரு தேசமாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்கள் தமது பொருண்மிய, சமூக, கலாசார மேம்பாட்டை மேற்கொள்வதற்கான உரிமையை, தொடர்ச்சியாகஆட்சிக்குவந்தசிங்களப்பெரும்பான்மை அரசாங்கங்கள் மறுத்துவந்த காரணத்தாலும், தமிழ் மக்களது இருப்புக்கு ஆபத்து உருவாகி வந்ததனாலும், 1977ம் ஆண்டு, தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தனிநாட்டினை அமைப்பதற்கு ஆதரவு வழங்கி, ஜனநாயக ரீதியில் பெருந்திரளாக வாக்களித்திருந்தார்கள்.

இந்தவகையில்தமிழ்த்தேசமக்கள்தொடர்ச்சியாக ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை 75 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வந்திருக்கின்ற நிலையிலே, 2009 இல் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரும், ஒற்றையாட்சியை நிராகரித்தும், தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தைக் கோரியுமே ஒவ்வொரு தேர்தல்களுடாகவும் தங்களது ஏகோபித்த ஆணையை வழங்கி வந்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசமும் - அதன் இறைமையும் அங்கீகிக்கப்படுகின்ற தீர்வுக்குப் பதிலாக - ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய எந்தவொரு வகையான தீர்வுக்கும் (13 ஆம் ; திருத்தச் சட்டமாகவோ அல்லது வேறு வடிவத்திலோ) இணங்குவதானது, தமிழ் மக்களுடைய ஆணைக்குத் துரோகம் இழைப்பதாகவே அமையும்.

1987 ஆம் ஆண்டு முதல் சிறிலங்காவின் அரசியலமைப்பில் உட்புகுத்தப்பட்ட 13 ஆம் திருச்சட்டம் கடந்த 36 ஆண்டுகளாக முழுமையாக நடைமுறையிலிருந்து வருகின்ற நிலையிலும், தமிழ் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகளும், நில ஆக்கிரமிப்புக்களும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும் இன்று வரை நடைபெற்றே வருகின்றன.

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை இனப்படுகொலையூடாக முடிவிற்கு கொண்டுவந்து 14 ஆண்டுகள் ஆகியிருக்கும் நிலையில், இலங்கையின் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் சிங்கள பௌத்தமயமக்கல் பெரும் வேகமெடுத்துள்ளது.

நீதிமன்ற கட்டளையினை மீறி, தமிழரின் தொன்மையான வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டு அங்கு பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. தமிழர் தாயகமெங்கிலும், குறிப்பாக சிங்களவர்கள், பௌத்தர்கள் இயல்பாக குடியிருக்காத பகுதிகளில் கூட, பௌத்த மத ஆலயங்கள் சிறிலங்கா அரச நிர்வாக மற்றும் இராணுவ இயந்திரங்களின் துணையுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு இவ்வாறு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த ஆலயங்களை சூழ இருக்கும் பகுதிகளில் , தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை திட்டமிட்டு மாற்றியமைக்கும் முனைப்போடு, சிறிலங்கா அரச ஆதரவுடன் சிங்கள குடியேற்ற திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் நிலங்களில் தமிழர்கள் காலங்காலமாக 300,000 க்கும் மேற்பட்ட கால்நடைகளுடன் மேய்ச்சலுக்குப் பயன்படுத்தி வரும் நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி, அங்கு சட்டவிரோதமான முறையில் சிறிலங்கா அரச ஆதரவோடுசோளப்பயிர்ச்செய்கையில்ஈடுபட்டுவரும் சிங்களவர்களால், தமிழர்கள் மேய்ச்சல் நிலங்களில் இருந்து துரத்தப்படுகின்றனர். உண்மையில் இந்த தமிழர்களின் பாரம்பரிய - புராதன அடையாள நிலமானது, சிங்கள பௌத்தமயமாக்கலுக்கான பகுதியாக சிறிலங்கா அரசினால் குறிவைக்கப்பட்டு, அங்கு இனப்பரம்பலை மாற்றியமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்தி திட்டம்' எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமானது - அந்தபகுதியில் பாரம்பரியமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் தமிழர்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சிங்களவர்களை குடியேற்றி இனப்பரம்பலை மாற்றவே சிறிலங்கா அரசினால் பயன்படுத்தப்படுகிறது. .

புராதன தமிழ் சைவ வழிப்பாட்டிடமான வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரிவிலுள்ள வெடுக்குநாறி மலையினை பௌத்த புராதன பிரதேசமாக மாற்றியமைத்து பிரகடனப்படுத்தும் நோக்குடன், சிறிலங்கா அரசின் தொல்பொருட்திணைக்களம் முயற்சித்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையின் தையிட்டியில் மிக உயரமான பௌத்த மத தூபியானது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தனியார்காணிகளைஆக்கிரமித்து சிறீலங்கா ஆயுதப்படைகளது துணையுடன் குறித்த பௌத்த தூபியை சட்டவிரோதமாக அமைத்துள்ளார்கள்.

இலங்கையில் நீதிமன்ற அதிகாரமும் பௌத்த அரசியல் அதிகாரத்துக்குட்பட்டதாவே இருந்து வருகின்றது. இங்கே சிறிலங்காவின் இறைமையின் உறைவிடமாக பௌத்த பேரினவாதமே இருப்பதால் வடக்கு கிழக்கு நீதிமன்றங்கள் பௌத்த அரசியல் அதிகாரம் தொடர்பான விவகாரங்களில் செயலிழந்து இருக்கின்றன.

பௌத்தம் ஓர் ஆழமான ஆன்மீகத் தரிசனம். அன்பையும் அறத்தையும் ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும் தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீகத் தத்துவம்.

இந்தத் தார்மீக நெறியை மேலாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம், இனவாத விசத்தினுள்ளே மூழ்கிக்கிடக்கிறது.

1948 இல் நாடு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்டுக்கொண்டதன் பின்னர், மாறிமாறி வரும் அரசாங்கங்கள் இனத்துவ அடிப்படையிலும், இனத்துவ பாகுபாட்டுடனான கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றன. இவ்வரசாங்கங்கள், தமிழ் மக்கள் விடயத்தில் எதுவித சகிப்பதன்மையுமின்றி, இலங்கைதீவில் அவர்கள் தனித்துவமான ஒரு தேசமாக வாழ்வதனை கட்டமைப்பு ரீதியாக சிதைத்து அழிப்பதனையே குறியாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றன.

தமிழ்மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டபோது, சிறிலங்கா அரசாங்கங்கள் தாம் கடைப்பிடித்துவரும் இனரீதியான பாகுபாட்டுடனான நிலைப்பாடு, மேற்கொண்டுவரும் இனவழிப்பு சார்ந்த நடவடிக்கைகள் மீதான கவனத்தைத் திசை திருப்பி, தமிழர்களின் போராட்டத்தை பயங்கரவாதமாகவும் தமிழ்மக்களை பயங்கரவாதத்திற்கு ஆதரவானவர்களாகவும் காட்டின.

2009 இல் தமிழ்மக்களின் ஆயுதப்போராட்டமானது இனவழிப்புடன் முள்ளிவாய்க்காலில் முடிவு றுத்தப்பட்டதன் காரணமாக, எதிர்த்து நிற்கும் ஆற்றலை தமிழ்மக்கள் இழந்துவிட்டதாக சிறிலங்கா அரசாங் கம் திருப்தியடைந்துள்ளது. தமிழர்களைப் போலன்றி, சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டை கேள்விக்கு உள்ளாக்காத இலங்கை முஸ்லீம்கள் மீதும் தற்போது இனவாதத்தைத் திருப்பியுள்ளது.

வியன்னா பிரகடனத்தின் 62வது பந்தியில், வலிந்து காணாமற்போகச் செய்தலை தடுப்பதற்கும், அவ்வாறான செயலைச் செய்பவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்குமாக - வினைத்திறன் மிக்க - சட்டரீதியான - நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. நாடுகள், தமது ஆட்புல எல்லைக்குள் இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறுவதாக நம்புவதற்கு இடமிருக்கும்போது, அவை தொடர்பில் - விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது அந்நாடுகளின் கடமை என்பதனையும்,

காலைக்கதிர் Kalaikkathir

# தனது அடிப்படை அரசியல் உரிமைகளில் ......





இக்குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டால் சம்பந்தபட்டவர்கள் மீது, சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் அப்பிரகடனம் மீளவலியுறுத்துகிறது.

இருந்தபோதிலும், சுயாதீனமான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே மனித உரிமைகள் தொடர்பான பிரகடனங்களை மீறியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கும் பொறிமுறையிலிருந்து விலகிவருகின்றது.

இவ்வருடம் பெப்பிரவரி மாதம், சிறிலங்காவின் மனிதவுரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள் வட மாகாணத்திற்கு பயணம் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட தரப்புகளான - வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் சமூகச்செயற்பாட்டாளர்கள், தமிழ் அரசியற்கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பலரையும் சந்தித்தனர். இச்சந்திப்புகளின்போது, மேற்குறித்த 62வது பந்தியில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு மாறாக - பழையவற்றை மறந்துவிடுமாறும், பொறுப்புகூறலை வலியுறுத்த வேண்டாம் எனவும் முன்னைய குற்றச்செயல்கள் பற்றிய விடயங்களை சிறிலங்கா அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கையாளும் எனவும், தாம் சந்தித்தவர்களிடம் பரப்புரையில் ஈடுபட்டதுடன், அழுத்தங்களையும் பிரயோகித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களும், தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் இவ்வாலோசனைகளை நிராகரித்து, சர்வதேச குற்றவியல் பொறுப்புக்கூறல் பொறிமுறையை வலியுறுத்தியபோது, சிறிலங்கா மனிதவுரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்படி ஆணைக்குழு தனது களப்பயணத்தை முடித்துக்கொண்டு வெளியிட்ட அறிக்கையில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு போன்ற உள்ளகப் பொறிமுறையினை அமைப்பதற்கு, தாம் சந்தித்த பாதிக்கப்பட்ட தரப்புகள் இணங்கிக்கொண்டதாக அப்பட்டமான பொய்யுரைத்துள்ளது. மேலும் பல தவறான தகவல்கள் அவ்வறிக்கையில் காணப்படுகிறது.

தமிழர் தேசத்தில், இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்வதுடன் தமிழ்த் தேசத்தின் பொருளாதாரம் திட்டமிட்டு சூறையாடப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடலில் சட்டரீதியாகவும் அனுமதி அளிக்க முயற்சிக்கின்றார்கள். போதிய கடல்வளம் உள்ள தமிழ்த் தேசத்தில் மத்திய அரசிடம் அனுமதி பெற்றுத்தான் தமிழர்கள் கடலில் கால் வைக்க முடியும் என்ற நிலையே காணப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளில் தான் பெற்று கொண்ட பொதுபடுகடன்களை மீள செலுத்த முடியாது முறிவடைந்து இருக்கின்றது.

நாடு என்ற ரீதியில் பொருளாதார வங்குரோத்தை எதிர்கொண்டுள்ள பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஆகு) ஒத்துழைப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு முதலாவது கட்ட நிதி உதவியும் கிடைக்கப்பெற்றுள்ளது. முதலாவது கட்ட நிதியை பெற்றுக் கொண்டவுடன் ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் விதித்த நிபந்தனை விவகாரத்தில் பாராளுமன்றம் ஒருமித்து செயற்படுகிறது என்பதை பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு காண்பிப்பதற்கே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் இனப்பிரச்சினை தோற்றம் பெற்றதை தொடர்ந்து பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது. தமிழ் மக்களை அழிப்பதற்காக மொத்த தேசிய வருமானமும், வெளிநாட்டு அரச முறை கடன்களும் முழுமையாக பயன்படுத்தப்பட்டன. யுத்த சூழல் தமிழர்களை மாத்திரமல்ல ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரத்தையும் அழித்தது, அதற்கு சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்கள் தலைமைத்துவம் வழங்கியது.

மொத்தத் தேசிய வருமானத்தில் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடுகளை விட இரு மடங்கு தொகைகள் பாதுகாப்புக்கென ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், அந்நிதியில் மோசடிகளும் இடம்பெற்று வருகின்றன.

பொருளாதார பாதிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் என்பது குறுகிய கால ஒரு தீர்வாகவே அமைய முடியும். அது நிலை பேறான தன்மையை உருவாக்கப் போவதில்லை. இலங்கை புதிய பரிமாணத்தை நோக்கி பயணிக்க வேண்டுமாயின் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்ஹி;டயாக வேண்டும். அதனைத் தவிர்த்து சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச தரப்பின் நிதி உதவியுடன் மாத்திரம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென பேரினவாத ஆட்சியாளர்கள் இன்றும் கற்பனையில் நகர்கிறார்கள்.

சிறிலங்காவின் இனவழிப்பு யுத்தத்தால், தமிழ்த் தேசத்தின் பொருளாதாரமானது ஐம்பது வருடங்கள் பின்தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில், தமிழர் தேசத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் நிலையில், சிறிலங்காவின் செயற்பாட்டுக்கு நிபந்;தனை எதுவுமின்றி நிதி வழங்குவது, தமிழர்களின் பொருளாதாரத்தை நசுக்கும் சிறீலங்கா அரசின் செயற்பாட்டுக்கு சர்வதேச நாணய நிதியமும் துணைபோவதாகவே உள்ளது.

இச் சூழ்நிலையில் இம் மேதினத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஏற்பாட்டில் முல்லைமாவட்டம் மல்லாவி சிவன்கோவில் வளாகத்தில் ஒன்று கூடி சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ் தேசமானது - தனது அடிப்படையான அரசியல் உரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்திற்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் 2023 மே தினத்தில் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

தமிழ்மக்கள் 75 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற தமிழ்த் தேச அங்கீகாரத்தையும் - அதனுடைய தனித்துவமான இறைமையையும் - சுயநிர்ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக் கூடிய - சமஸ்டி - அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும்; இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்றும் கோருகின்றோம்.

தமிழ் மக்கள் - காலம் காலமாக வழங்கிவரும் தமிழ்த் தேச அங்கீகாரத்துக்குரிய ஆணையை மீறி, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தத்தையோ அல்லது ஒற்றையாட்சிக்குட்பட்ட வேறு எந்தவொரு தீர்வையோ தமிழினம் நிராகரிக்கிறது.

தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்படவேண்டும்.

இனவழிப்பு யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு ஈழத் தமிழ்த் தேசத்தை, போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக பிரகடனம் செய்து, அத்தேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான விசேட நிதியேற்பாடுகள் செய்யப்படவேண்டும். அத்துடன் குறித்த செயற்திட்டத்தில் போரால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்கள், முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் போன்றோர் உள்வாங்கப்பட்டு அவர்களின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக நீக்கப் படவேண்டும்.

அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலையை வலியுறுத்துவதோடு,

தமது உரிமைகளுக்காக போராடும் தரப்புக்களை சிறைக்குள் தள்ளி - அச்சுறுத்தி, உரிமைகளை நசுக்க ரணில் அரசால் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையோ அல்லது அதனையொத்த எந்தவொரு சட்டத்தையோ முற்றாக எதிர்க்கின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

தமிழ்த் தேசத்தின் விவசாயிகள், மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். அவர்களுக்குரித்தான நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும். தொழிலாளர்கள் ஒன்றுபட்டு செயற்படக் கூடிய அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களது உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.

கடற்தொழிலாளர்கள்; தமது கடற்தொழிலை தத் தமக்குரிய கடற்பரப்பில் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்படவேண்டும். தென்னிலங்கை மீனவர்களது அத்துமீறிய மீன்பிடிச் செயற்பாடுகள் தடுக்கப்படல் வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கான உதவிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் கடற்தொழிலாளர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும். வெளிநாட்டு மீனவர்கள் எமது கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படக்கூடாது. எமது கடற்பரப்பினுள் அத்துமீறும் இந்திய மீனவர்களது நடவடிக்கைகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்னும் போர்வையில் தொழிலாளர்களின் வாழ்நாள் சேகரிப்பின் பெறுமதியை குறைக்கும் அரசின் செயற்பாடுகள் நிறுத்தவேண்டும்.

# பொது ஊழியர் சங்கத்தின் மே தினம் வவுனியாவில்






அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனத்தினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊழியர் நலன் சார் பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன. (100)

# அமைச்சர் அலி சப்ரி தென்கொரியா பயணம்



தென் கொரியாவின் இன்சியான் நகரில் இடம் பெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று (செவ்வாய்கிழமை) அந்நாட்டுக்கு உத்தியோக பூர்வவிஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

2 ஆம் தகதி முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இக்கூட்டம் நிதி அமைச்சர்கள், மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், முக்கிய உலகளாவிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் மூத்த ஊடகப் பிரதானிகள் உட்பட சுமார் 3000 - 4000 பங்கேற்பாளர்கள் கலந்து கொள்ளும் ஓர் உயர்மட்ட நிகழ்வாகும்.

4 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஆளுநர்களுக்கான வர்த்தக அமர்வில் இலங்கையின் தற்போதைய பொருளாதார முன்னேற்றங்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான தற்போதைய ஈடுபாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக, இந்த நிகழ்வின் பக்க அம்சமாக பல நாடுகளின் பிரதிநிதிகளுடன் இருதரப்பு சந்திப்புகளில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மே தினத்தை முன்னிட்டு 'ப்றொடெக்ட்' சங்கத்தின் கவனவீர்ப்புப் போராட்டம்

மே தினத்தை முன்னிட்டு முறைசாரா துறையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டம் உருவாக்கப்படவேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ஹற்றனில் நேந்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

ஹற்றன் மல்லியப்பு சந்தியில் 'ப்றொடெக்ட்' சங்கத்தின் உப தலைவி கருப்பையா மைதிலி தலைமையில் இடம்பெற்ற கவனவீர்ப்பு போராட்டத்தில் 100 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.

வீட்டுத் தொழிலாளர்களும் தொழிலாளர்களே, அவர்களின் தொழில்சார் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என பல கோரிக்கைகள் இதன்போது விடுக்கப்பட்டது,

மேலும் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோங்கள் எழுப்பியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 18 திங்கட்கிழமை 01.05.2023 கதிர் 45

## சட்டச் சிக்கல் தீர்ந்தால் மாகாணத் தேர்தலை உடன் நடத்தத் தயார்

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய சட்டச் சிக்கிலை தீர்த்தால் அதனை எந்நேரத்திலும் நடத்துவதற்கு தயாராக உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளுக்கான தேர்தல் பற்றிய கருத்துக்கள் அண்மைய நாட்களில் அரசியல் அரங்கில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான 2☞

# இந்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### புதிய அரசமைப்பு ஊடாக காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றுக்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் இணங்கவைக்க முடியும் என்று நம்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் இன்று கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் இடம்பெற்றது.

சூம் நிகழ் நிலை தொழில்நுட்பம் மூலம் அதில் உரையாற்றினார் ஜனாதிபதி. 2☞





## திருமலையில் கோர விபத்து! இரண்டு இளைஞர்கள் சாவு!!

### மேலுமொருவர் படுகாயம்

திருகோணமலையில் இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹொரவ்பொத்தான, கெப்பித்திகொல்லாவ பிரதான வீதி கிவுளேகட பகுதியில் நேற்றிரவு 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஹொரவ்பொத்தான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெப்பித்திகொள்ளாவ பகுதியிலிருந்து கார் ஒன்று ஹொரவ்பொத்தான நோக்கி வந்து கொண்டிருந்த போது வீதியிலிருந்த மாட்டுடன் மோதி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது காரில் பயணித்த மூவரில் ஒருவர் ஹொரவ்பொத்தான வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார். மற்றைய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் ஹொரவ்பொத்தான, மரதன்கடவல பகுதியை சேர்ந்த முனசிங்ககே ரோமிந்த மதுபாசன (22 வயது) மற்றும் ஹொரவ்பொத்தான – நிக்கவெவ சந்தியில் வசித்து வரும் ரன்னஹென்னகே சதறு பிரபான (19 வயது) ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த விபத்தில் படுகாயமடைந்த 30 வயதுடைய நபர் அனுராதபுர போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (02)

## மனைவியைத் தீ வைத்து கொலைசெய்த கணவன்

### தீக்காயங்களுடன் அவர் கைது

மனைவியைத் தீயிட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஒருவரை வெல்லம்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சேதவத்தை பிரதேசத்தில் வசித்து வந்த தம்பதியினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக கடந்த 24ஆம் திகதி கொட்டுவில பாடசாலைக்கு முன்பாக வாக்கு வாதம் இடம்பெற்றுள்ளது.

அதன்போது, தனது உடலில் பெற்றோல் ஊற்றி தீ வைத்த கணவர், மனைவியை யும் கட்டியணைத்துள்ளார்.

இதில் படுகாயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தநிலையில், சிகிச்சை பெற்றுவந்த 44 வயதான மனைவி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

சிகிச்சை பெற்று வரும் கணவர் (வயது 54) வெல்லம்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (02)

## சஜித்தின் கட்சி மாயமாகிவிடும்

### சாபமிடுகின்றது ஐ.தே.க.



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்காலத்தில் முக வரியற்று காணாமல்போய்விடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கட்சிகள் உருவாகலாம். இலங்கை வரலாற்றில் அவ்வாறு உருவாகியும் உள்ளன. எனினும், அவை நிலைப்பதில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கும் இதே கதிதான் ஏற்படும்.

நாட்டின் நலன் கருதி செயற்பட்ட பௌசிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. அதாவது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தமது கட்சி எதிர்ப்பு என்பதையே அக்கட்சி இதன் மூலம் கூற விளைகின்றது.

தமது அணி சந்தர்ப்பவாத அரசியலையே நடத்துகின்றது என்பதை நிரூபிக்கும் வகையிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை ஐக்கிய மக்கள் சக்தி தவிர்த்தது – என்றார். (02)

## செயற்கை நுண்ணறிவு பாவனையை ஊக்குவிக்க நிபுணர்களின் செயலணி

### பெயர்களைப் பரிந்துரைக்கக் கேட்கிறார் ஜனாதிபதி

நாட்டில் செயற்கை நுண்ணறிவுப் பாவனையை ஊக்குவிப்பதற்காக துறைசார் நிபுணர்கள் அடங்கிய ஜனாதிபதி செயலணியொன்றைப் பெயரிட்டு அவர்களின் விவரங்களை சமர்ப்பிக்குமாறும், அது தொடர்பான கோட்பாட்டு ஆவணமொன்றை தயாரிக்குமாறும் தொழில்நுட்ப அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கு செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில், ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயம் மற்றும் மீன்பிடித்துறையின் நவீனமயமாக்கல், சுற்றுலாத் துறை, விநியோக மையங்களை மேம்படுத்துதல் போன்ற நமது பொருளாதார சீர்திருத்தங்களுடன் அவசரமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தவிர, நாங்கள் தொழில்நுட்ப துறையில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

இன்று உலகம் செயற்கை நுண்ணறிவுடன் முன்னேறிவரும் நிலையில் இலங்கையும் செயற்கை நுண்ணறிவில் அதிக கவனம் செலுத்தி, அதில் அதிக முதலீடு செய்ய வேண்டும். இதனைத் தனியார் துறை ஊடாகவே மேற்கொள்ள வேண்டும்.

அது தொடர்பில் உங்கள் கருத்துக்களைப் பெறவது தான் இந்தக் கலந்துரையாடலுக்கு உங்களை அழைப்பு விடுத்ததன் முதன்மை நோக்கமாகும். இந்தத் திட்டங்களை எவ்வாறு தொடங்குவது? அதன் சாதக பாதகங்கள் என்ன? என்பது தொடர்பில் உங்களுடன் கலந்துரையாடவேண்டும்.

அடுத்த ஆண்டு, செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்திற்காக ஒரு பில்லியன் ரூபாவை ஒதுக்க நாம் எதிர்பார்க்கின்றோம். நாட்டில் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியில், அதற்கு ஏற்ற சூழல் தேவை. அதற்காக தனியான ஒரு நிறுவனமும் தரவுகளும் தேவை. எனவே இந்த திட்டங்களை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்த உங்கள் கருத்துக்களைப் பெற எதிர்பார்க்கிறேன்.

மேலும் டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். எதிர்வரும் மாதங் களில் நாம் அதற்காக அதிக முயற்சி எடுக்க வேண்டும். அதற்குத் தேவையான திட்டங்களை அரசு ஏற்கனவே தயாரித்துள்ளது.

நம் நாட்டில் ஆண்டுக்கு 2,500 பொறியாளர்கள் மட்டுமே உருவாக்கப்படுகின்றனர். குறைந்தபட்சம் 10,000 பொறியாளர்களை இலக்காகக்கொள்ளவேண்டும் என்று நான் பரிந்துரைத்துள்ளேன். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதில், சிங்கப்பூரையும் 2☞

## விசாரணைகள் தொடங்கின

பெண் ஊடகவியலாளர் ஒருவரை பாலியல் ரீதியில் துன்புறுத்தியமை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களுக்கு அமைவாக சுயாதீனத் தொலைக்காட்சியின் அதிகாரியொருவருக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பெண் ஊடகவியலாளர் ஒருவர் பாலியல் ரீதியாக துன்புறத்தப்பட்டுள்ளமை தொடர்பில் உள்ளக மற்றும் அமைச்சரவை மட்டத்திலான விசாரணைகளிற்கு உத்தரவிட்டுள்ளேன். 2☞

## பௌசிக்கு எதிராக கட்சிக்குள் முடிவு

கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்பட்டதன் அடிப்படையில் ஏ.எச்.எம். பௌசியை கட்சியின் குழு கூட்டத்திற்கு அழைப்பதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை மீதான வாக்கெடுப்பை புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்த நிலையில், பௌசி அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.

இதனையடுத்து, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முன்னதாக அவரை எந்தவொரு கட்சியின் குழுக் கூட்டத்திற்கும் 2☞

## வடக்கு தனியார் ஊழியர் சங்கத்தால் யாழ்ப்பாணத்தில் வாகன பேரணி

### மே தினத்தையொட்டி இன்று நடந்தது



வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினத்தில் யாழ்ப்பாணத்தில் வாகன ஊர்வலமொன்று யாழ். நகரில் நடைபெற்றது. இதன்போது மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிவப்பு கொடியை கட்டியவாறு இந்த ஊர்வலம் இடம்பெற்றது.

மே தினத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து புறப்பட்ட இந்த மோட்டார் வாகன ஊர்வலம் யாழ்ப்பாணம் நகர மத்தியில் கஸ்தூரியார் வீதியில் நிறைவுபெற்றது.

உலகம் முழுவதும் மே தினம், உழைப்பாளர்கள் உரிமைக்காக கொண்டாடப்படுகின்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் வேறு எந்தவொரு தொழிற்சங்க மே தினமோ அரசியல் கட்சிகளின் மே தினமோ இடம்பெறவில்லை.

மே தின வாகனப் பேரணியையொட்டிப் பெருமளவு பொலிஸார் வீதிகளில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். குறைந்தளவானவர்களே ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

## யாழ்ப்பாணத்தில் நிதி சேகரிப்பு நடைப் பயணம்



'புனர்வாழ்வும் புது வாழ்வும்' என்ற அமைப்பின் ஊடாக வறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலான நடைபயணம் இன்று யாழ்ப்பாணத்தில் தொடங்கியது. ஐக்கிய ராஜ்யத்தை தள 2☞

## மல்லாவியில் சிறப்புற இடம்பெற்றது முன்னணியின் தொழிலாளர் தினம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து நடத்திய தமிழ் தேசிய தொழிலாளர் தினம் மல்லாவியில் மிகவும் சிறப் பாக இடம்பெற்றது.

மல்லாவி நகரின் அனிஞ்சியன்குளம் பாடசாலைக்கு முன்பாக தொடங்கிய மே தின ஊர்திப் பவனி மல்லாவி நகரின் ஊடாக மல்லாவி சிவன் ஆலய வளாகத்தில் முடிந்தது. அங்கு மேதின கூட்டம் இடம்பெற்றது

ஊர்திப் பவனியில் நில ஆக்கிரமிப்பு மற்றும் ஒற்றையாட்சி அரசமைப்பு என்பவற்றுக்கு எதிரான 2☞



## சட்டச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தில்திருத்தங்களைமேற்கொண்டு, அதற்குரிய நிதியை வழங்கினால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அந்தத் தேர்தலை நடத்து-வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

மாகாணசபை தேர்தல் குறித்துக் காணப்படும் சட்டச் சிக்கலுக்கு நாடாளும ன்றத்தின் ஊடாகத் தீர்வு வழங்கப்படும்-வரை அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லமுடியாது.

நாளை செவ்வாய்கிழமை இடம்பெற வுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் வாராந்த ஒன்று கூடலில் இவ்விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய முயற்சியை தேர்தல்கள் ஆணைக்குழு கைவிடவில்லை என்றும் நிதி கிடைப்பது தொடர்பில் இன்னமும் உறுதியான அறிவிப்புக்கள்வெளியாகவில்லைஎன்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பௌசிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பதில்லை என்று குழுக்கூட்டத் தில் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது.

அதேநேரம், பௌசிக்கு எதிரான நடவடிக்கையானது ஏனைய உறுப்பினர்க ளுக்கும் ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் எடுக்கப் படுவதாக கட்சியின் உள்ளகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் துன்புறுத்தல்களிற்குள்ளானதாக குறிப்பிட்ட பெண் ஊடகவியலாளர் சமூக ஊடகங்களில் பதிவுகளைச் செய்-துள்ள போதிலும் அவர் உத்தியோகபூர்வ மாக எவ்விதமான முறைப்பாட்டையும் முன்வைக்கவில்லை. இருந்தபோதிலும் அந்த விடயங்களின் உண்மைத் தன்மை தொடர்பில் விசாரணைகள் தொடங் கியுள்ளன.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பில் இதுவரை எந்த முறைப்பாடும் எனக்கு கிடைக்கவில்லை ஊடக அமைச்சின் செயலாளருக்கோ அல்லது சுயாதீனத் தொலைக்காட்சியின் நிர்வாகத்திற்கோ கிடைக்கவில்லை என்பதும் முக்கியமான விடயம் – என்றார்.

## செயற்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

கிழக்கு ஆசியா, தென் கொரியா, ஜப் பான் மற்றும் சீனா செயற்கை நுண்ணறிவு டன் முன்னேறி வருகின்றன என்றாலும், மேற்கு ஆசியா இதுவரை அந்த இடத்திற்கு வரவில்லை. எனவே எங்களிடம் இன்னும் தெளிவான துறைகள் உள்ளன. அதற்கு நாம் மூலோபாயங்களை வகுத்து இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தவேண் டும்.

இந்த நோக்கத்திற்காக, பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைகளை மேம்படுத்த வும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மற்றும் அமைச்சின் செயலா ளர்சிரேஷ்டபேராசிரியர்நிரஞ்சன்குணவர்தன ஆகியோர் செயற்கை நுண்ணறிவை இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலின் பரந்த பரப்பில் எவ்வாறு இணைப்பது என்பது குறித்து தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

அதனுடன் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு தேவையான உட்கட்ட மைப்பு அபிவிருத்தி மற்றும் இத்துறையின் புதிய போக்குகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இத்துறையின் அபிவி ருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடலில் கலந்துகொண்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கொண்டு இயங்கும் தொண்டு அமைப்பின் ஊடாக வறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுக் கும்வேலைத்திட்டம்யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தி யமூர்த்தி தலைமை யில் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி யாழ்ப்பாணத் தில் தொடங்கிய நடைபவனி யில் ஐக்கிய ராஜ்யத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரு 55 கிலோ மீற்றர் வரை நடை பயணம் மேற்கொண்டு நிதி திரட்டி அதனைக் கொண்டு வறிய மக்க ளுக்கான தண்ணீர் வசதியைப் பெற்றுக் கொடுக்க வுள்ளார்.

நடை பயணம் பருத்தித்துறை வீதி ஊடாக பருத்தித்துறைமுனையினை அடைந்து மீண்டும் புத்தூர் சந்தியில் நிறைவடைந்தது.

இதன்மூலம் கிடைக்கப் பெறும் பணத் தினைகொண்டுகுடிதண்ணீர்அற்றமக்களுக் குக் கிணறுகளை அமைத் துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதே போன்று வீடற்றோருக்கு வீடுகளை கட் டிக் கொடுத்தல் பாடசாலைக ளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் போன்ற வற்றிற்காகவும் இந்தத் திட்டத்தின் மூலம் நிதி சேகரிக்கப்படவுள்ளது.

### மார்க்சிச லெனினசக் கட்சியின்

# மே தின ஊர்வலமும் கூட்டமும் வவுனியாவில் களை கட்டியது













புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலமும் கூட்டமும் வவுனியாவில் இன்று காலை இடம்பெற்றது. இந்த ஆட்சியின் அடக்குமுறைகளை எதி ர்ப்போம் என்ற தொனிப் பொருளுடன் இந்த மே தினம் இடம்பெற்றது.

வவுனியாதமிழ்மத்தியமகாவித்தியாலத் திற்குமுன்பாகத்தொடங்கியஊர்வலம்கடைவீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா மாநகர மண்டபத்தை அடைந்தது.. அங்கு மேதி னக் கூட்டம் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.பகிதரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைத்தலைவர்

பூ.சந்திரபத்மன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக கே.ஜிந்திசன், தொழிற்சங்கம் சார்பாக க.மகேந்திரன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சார்பில் சிவந்தினிஆகியோர்சிறப்புரைகளைஆற்றினர். ஊர்வலத்தின் போது விலையேற்றத்தைக் கண்டித்தும், தொழிலாளர்களின் உரிமை களை பறிக்கும் செயற்பாட்டை கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பபட்டதுடன், ஜனநாயக உடன்படிக்கையை சித்தரிக்கும் ஊர்தியும் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தது.

ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (100)

# குறுகிய அரசியல் நலன்களுக்கு இரையாகாமல் நாட்டை முதன்மைப்படுத்திச் செயற்படுங்கள்

## மே தினத்தில் ஜனாதிபதி கோரிக்கை



நாட்டில் உழைக்கும் மக்களின் பெருமையை உலகுக்கு காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இதுவாகும். இந்த இக்கட்டான நேரத்தில் குறுகிய அரசியல் நலன்களுக்கு இரையாகாமல் நாட்டை முதன்மைப்படுத்தி செயற்படுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அனைவரையும் கேட்டுக்கொண் டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்தாலும் உழைக்கும் மக் களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த இடமளிக்கப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட செய்தி யில் இதனைக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி அதில் மேலும் தெரிவித்துள்ளவை வரு மாறு –

உழைக்கும் மக்களே, நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார செயல்முறையிலும் வலுவான செல்வாக்கை செலுத்தக்கூடிய சமூக சக்தியாக உள்ளனர்.

வரலாறு நெடுகிலும் நாம் எதிர்கொண்ட மற்றும் வெற்றிகொண்ட சவால்கள் ஏராளம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு உழைக்கும் மக்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு மே தினத்தை கொண் டாடும் நேரத்தில், நாடு மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியில் இருந்ததால், அனைவரும் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அந்த சவாலான காலங்களில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான கடினமான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக, பொறுமையுடனும் தைரியத்துடனும் காத்திருந்த அனைத்து உழைக்கும் மக் களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கையின் உழைக்கும் மக்களின் பெருமையை உலகுக்குக் காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது இருப்பதோடு, இந்த இக்கட்டான நேரத்தில் குறுகிய அரசியல் நலன்களுக்கு இரை யாகாமல் நாட்டை முதன்மைப் படுத்தி செயற்படுமாறு அனைவ ரையும் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் உரிமை களை பாதுகாக்க நாங்கள் எப் போதும் செயற்பட்டு வருவதோடு, அவர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகளை வென்றெடுப் பதன் மூலம் உழைப்புக்கு சரி யான மதிப்பு கிடைக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே இன்றைய நாளின் எமது எதிர்பார்ப்பாகும்.

ஊழியர்சேமலாபநிதிதொடர் பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்தாலும் உழைக்கும் மக் களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த இடமளிக்கப்படமாட்டாது என்பதை யும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

2048 ஆம் ஆண்டளவில் முன்னேற்ற மடைந்த இலங்கையை கட்டியெழுப்பு வதற்கான புதிய சீர்திருத்தப் பாதையில் ஒற்றுமையுடன்கைகோர்க்குமாறு அனைத்து உழைக்கும் மக்களையும் நான் அழைப்ப தோடு, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப் படும் அர்த்தமுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்துக்காக அவர்களை வாழ்த்துகிறேன் என ஜனாதிபதி ரணில் குறிப்பட்டுள்ளார்.

## மல்லாவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளங் களைத் தாங்கிய ஊர்தியுடன் மக்கள் வருகை தந்தனர். மேலும் வடக்கும் கிழக்கும் தமிழர் தாய கம், தமிழர் கடல்,நில வளங்களைச் சுரண்டாதே, இந்த மண் எங்களின்சொந்தமண்போன்றமுழக்கங்களை எழுப்பிபேரணியில்கலந்துகொண்டிருந்தனர் பொதுக்கூட்டத்தில் மக்கள் மத்தியில் மேதி ன பிரகடனம் வாசிக்கப்பட்டது இந்த மே தின நிகழ்வில் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர்களும்தலைவர்களுமானகஜேந் திரகுமார் பொன்னம்பலம்,செல்வராசா கஜேந்திரன் உள் ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இந்தாண்டு இறுதிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது புதிய அரசமைப்பின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் புதிய அரசியல் வேலைத்திட்டம் தொடர்பில் அவர் அறிவித்தார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் இணங்க வைக்க முடியும் என்று நாம் நம்புகிறோம் என்றார் அவர்.

அடுத்த 25 வருடங்களுக்குள் இலங் கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கான அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட் டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தி யில் ஒருமித்த கருத்தை உருவாக்குவோம். புதிய அரசியலமைப்பை கொண்டு வர உத்தேசித்துள்ளோம்.

அனைத்து தெரிவுக்குழுக்கள் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கும் இளைஞர்களை நியமிப்பதை இம்மாதத்தி ற்குள்நிறைவுசெய்வோம். மக்கள் சபைகளை அமைப்பதற்கான சட்டமூலத்தையும் விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளோம் – என்றார். நாங்கள் சர்வதேச நாணய நிதி யத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை இப்போது நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளதால் அதை செயல்படுத்த முடியும் என்று நம்புகிறோம், என்றும் அவர் மேலும் கூறினார்.

நாளையை நினைத்து இனியும் நாம் பொய்யான வாக்குறுதிகளை வழங்க முடியாது. அடுத்த 25 வருடங்களுக்குத் தி ட்டமிடுவது அவசியம். 2048ஆம் ஆண்டை இலங்கைஆண்டாகமாற்றுவதற்கு அனைத்து அர சியல் கட்சிகளும் இணைந்து செயற்படு மாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் மேலும் கூறினார்.

# நிதி அமைச்சிடமிருந்து பதில் இல்லை நாமும் முயற்சிகளைக் கைவிடவில்லை!

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு



உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான கலந்துரையாடலுக்காக நிதி அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரையில் எந்தவொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறிருப்பினும் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை தாம் இன்னும் கைவிடவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்தோடு மாகாணசபைகள் தொடர்பில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு நாடாளுமன்றத்தினூடாக தீர்வு வழங்கப்பட்டால் அந்தத் தேர்தலையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பாக எந்தவொரு முன்னேற்றமும் தென்படாமலுள்ளமை தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை நாம் கைவிடவில்லை. தேர்தலுக்கான அடிப்படை செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துக் கொண்டே இருக்கின்றோம். அதன் ஒரு பகுதியாக விசேட தேவையுடையோருக்கு வாக்களிப்பதற்கான பயிற்சிகள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். இம்மாதம் முழுவதும் இந்த பயிற்சிகள் இடம்பெறும்.

அத்தோடு இவ்வாண்டுக்கான வாக்காளர் இடாப்பை திருத்தும் பணிகளும் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை வீடுகளுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் தற்போது முன்னெடுத்துள்ளனர். படிவத்தை பூரணப்படுத்தி விரைவாக ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான சந்திப்பின் பின்னர் அரச தரப்பிலிருந்தோ அல்லது நிதி அமைச்சு மற்று திறைசேரியிடமிருந்தோ தேர்தலுக்கான நிதி தொடர்பில் எந்தவொரு அறிவிப்பும் கிடைக்கப்பெறவில்லை. நிதி அமைச்சுடனான கலந்துரையாடலுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் எந்த பதிலும் இல்லை. திறைசேரியுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் என்றாலும், நிதி அமைச்சரின் அனுமதி வழங்கப்பட வேண்டும். – என்றார்.

இதே வேளை தற்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் வினவியதற்கு பதிலளித்த அவர் –

மாகாணசபைத் தேர்தல் குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு, அதற்குரிய நிதியை வழங்கினால் எந்த சந்தர்ப்பத்திலும் அந்தத் தேர்தலை நடத்துவதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். மாகாணசபை குறித்து காணப்படும் சட்ட சிக்கலுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக தீர்வு வழங்கப்படும் வரை அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியாது. நாளை (செவ்வாய்கிழமை) இடம்பெறவுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் வாராந்த ஒன்று கூடலில் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும். – என்றார்.

# தோட்ட தொழிலாளர்; உரிமைகளுக்காக இ.தொ.கா தொடர்ந்தும் குரல்கொடுக்கும்

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் மேதின வாழ்த்து



உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் உலகமே மகிழ்ச்சியாக இருக்கும். உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாக பிரகடனப்படுத்தப்பட்ட மே தினத்தை கொண்டாடும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

“உலகின் பல்வேறு நாடுகளில், பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமைகள் மற்றும் வெற்றியை கொண்டாடும்முகமாக மேமாதம் முதலாம் திகதியை உலகத் தொழிலாளர்கள் நாளாக கொண்டாடுகிறோம்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் தான். பாட்டாளி வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் நாடு வளர்ச்சியடையும். இலங்கையில் பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

காலனித்துவ ஆட்சிக் காலம் முதல் சுதந்திர இலங்கையிலும் கூட கடுமையான போராட்டங்கள் ஊடாகவே தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்ததுடன் தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்களும் நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்டன.

இலங்கை – இந்திய காங்கிரஸ் உருவாக்கத்தின் பின்னர் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக உருவானமை தொழிலாளர் நலன்சார் நீட்சியின் அடிப்படையில்தான். குடியுரிமையற்று இருந்த பெருந்தோட்ட தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க இ.தொ.கா போராட்டங்களை வரலாறு முழுவதும் செய்துள்ளது.

அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் அடிப்படையாக கொண்டே அனைத்து சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டுள்ளனர். அதே வழியில் இ.தொ.கா தொடர்ந்தும் பயணம் செய்யும். தொழிலாளர்களுக்காக எமது தொழிற்சங்க ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

தொழிலாளர்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கும் பொருளாதார திட்டங்களை உருவாக்க வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கபபடுவதை உறுதி செய்யும் அதே வேளை அவர்களின் வாழ்வாதார உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

# அநுராதபுரம் - காங்கேசன்துறை வரை ரயில் சேவை இருமாதங்களில் ஆரம்பம்!

## போக்குவரத்து அமைச்சர் பந்துல உத்தரவாதம்



அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை இன்னும் இரு மாதங்களுக்குள் ஆரம்பமாகும். வடக்கு மாகாணத்துக்கான ரயில் சேவை இவ்வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதை திருத்தப் பணிகளை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அநுராதபுரம் தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதையின் திருத்த பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. பாதையை நவீனப்படுத்தியதன் பின்னர் ரயில் சேவையை துரிதமாக முன்னெடுக்க முடியும்.

மஹவ முதல் ஓமந்தை வரையிலான இந்த செயற்திட்டத்துக்கு இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் 3,500 கோடி ரூபா ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியிலும் இந்த அபிவிருத்தி செயற்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

திருத்த பணிகளில் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரை ரயில் சேவை ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான ரயில் பாதையை குறுகிய காலத்துக்குள் புனரமைத்து இவ்வருட காலத்துக்குள் காங்கேசன்துறை முதல் கொழும்பு வரையிலான ரயில் சேவையை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. – என்றார்.

# ஆண் ஒருவரின் சடலம் வத்தளையில் மீட்பு!

வத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பள்ளியாவத்தை பாலத்திற்கு அருகில் உள்ள ஹமில்டன் கால்வாயில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சடலமாக மீட்கப்பட்டவர் 50 முதல் 60 வயதுக்கு இடைப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் ராகமை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் ஒருவருடத்தில் 175 பேர் தற்கொலை!

## வெளியாகிய அதிர்ச்சித் தகவல்

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்கு உட்பட்ட 11 பேர் தவறான முடிவை எடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸாரின் புள்ளிவிவரம் ஊடாகவே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

குறித்த தகவலின் பிரகாரம் மேலும் தெரியவருவதாவது –

யாழ்ப்பாணத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு 175 பேர் தவறான முடிவெடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர்.

இவர்களில் 09 பேர் 18 வயதிற்குள் உட்பட்ட சிறுவர்கள் இதேவேளை, 2023 ஆம் ஆண்டு 18 வயதிற்குட்பட்ட 2 சிறுவர்களுமாக மொத்தமாக 11 சிறுவர்கள் உயிரை மாய்த்துள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 116 பேரும், யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 59 பேரும் உயிர் மாய்த்துள்ளனர். இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் வாரம் வரையிலான கால பகுதியில் 54 பேர் உயிர் மாய்த்துள்ளனர். அவர்களில் இருவர் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 39 பேரும், யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 15 பேரும் உயிர் மாய்த்துள்ளனர். அதேவேளை இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 50 பேர் உயிர் மாய்க்க முற்பட்ட நிலையில் , உறவினர்களால் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது உயிரை மாய்க்க முற்படுவது தண்டனைக்கு உரிய குற்றம் என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தீர்வுகள் இல்லை என்று தோன்றும் பிரச்சினைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி உணர்ச்சிபூர்வமான ஆதரவை வழங்க சுமித்ராயோ ! 365 நாட்களிலும் காலை 9 மணி முதல் இரவு 8மணி வரை திறந்திருக்கும். வருகை தந்தால் நேருக்கு நேர் மற்றும் தொலைபேசி ,மின்னஞ்சல் மூலம். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உதவி கிடைக்கும். சேவைகள் கண்டிப்பாக இரகசியமானது. மற்றும் இலவசம்

சுமித்ரயோவை தொடர்பு கொள்ளும் வழிகள்:

தொலைபேசி: 011-2692909 / 011-2683555 / 011-2696666

மின்னஞ்சல்: sumithrasumithrayo.org/

இணையதளம்: www.sumithrayo.org

முகவரி: இல. 60/ய ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 7.

மெல் மெதுர தொலைபேசி: 011-2693460 / 011-2694665

மின்னஞ்சல்: melmedurasltnet.lk

இணையதளம்: www.melmedura.org

முகவரி: இல. 60 ஹோட்டன் பிளேஸ், கொழும்பு

# மலையகத்தில் பெய்து வரும் அடை மழை வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் பாதிப்பு







மலையகத்தில் பிற்பகல் வேளையில் பெய்து வரும் அடை மழை காரணமாக வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நுவரெலியா – கந்தப்பளை பகுதிகளில் கடும் மழை காரணமாக பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய காணிகள் மூழ்குவதற்கு முக்கிய காரணம் என விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்தோடு, தோட்டங்களை அண்டிய வீடுகளுக்கும் வெள்ள நீர் புகுந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. மேலும், மழை காரணமாக நுவரெலியா – உடபுஸ்ஸலாவை பிரதான வீதியின் போக்குவரத்தும் சில மணித்தியாலங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தமை குறிப்பிடதக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரத்தில் முழு உண்மைகளும் வெளிவரவேண்டும்

இலங்கைக் கடற்பரப்பில் தீப் பிடித்து எரிந்ததன் மூலம் பெரும் எண்ணெய்க் கசிவையும் பிளாஸ்ரிக் மூலப் பொருட்களைக் கொட்டியும் கடலைப் பெரும் மாசுக்கு உட்படுத்தியது எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல். கடந்த சில நாட்களாக இந்தக் கப்பல் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் அதிகரித்துள்ளன. இந்தக் கப்பல் இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு ஏற்படுத்திய பெரும் பாதிப்புக்கான இழப்பீடாக 6 முதல் 7 பில்லியன் டொலர் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று துறைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால், அந்த இழப்பீட்டை கப்பல் நிறுவனத்திடம் இருந்து பெறுவதற்கான வழக்கு இலங்கைநீதிமன்றத்தில்தொடுக்கப்படாமல்சிங்கப்பூர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளது. அங்கு வழக்குத் தொடுக்கப்பட்டதன் மூலம் இழப்பீட்டுத் தொகை மில்லியன்களுக்குக் குறைந்துவிடும் என்கிற விமர்சனங்களும் வரத் தொடங்கியிருக்கின்றன.

இந்தப்பின்னணியில்தான்எக்ஸ்பிரஸ்பேர்ள்கப்பல்விவகாரத்தில் இழப்பீட்டுத் தொகையைப் பெறாமல் இருப்பதற்காக இலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு 25 மில்லியன் அமெரிக்க டொலர் லஞ்சமாகக் கொடுக்கப்பட்டது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்தார். இது தொடர்பான விவரங்களை அவர் பின்னர் நாடாளுமன்றத்திலும் பகிர்ந்திருந்தார். நாடாளுமன்றத்தில் சித்திரை 25 இந்தத் தகவலைத் தெரிவித்த அமைச்சர், ஐக்கிய இராச்சியத்தில் (லண்டன்) உள்ள ஒரு வங்கியில் சாமர குணசேகர என்பவரின் பெயரில் இந்தப் பணம் வைப்பிலிடப்பட்டதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் தெரிவித்தார். ஆனால் இது தொடர்பில் எந்தவித ஆதாரமும் தன்னிடமில்லை என்பதையும் அவர் தெரிவித்துவிட்டார். இது தொடர்பில் காவல் மா அதிபருக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் தான் அறிவித்திருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவரது அறிவிப்பு வெளியாகி இன்று ஐந்தாறு நாட்கள் கடந்துவிட்டபோதும் அது பற்றிய எந்தவித மேலதிகத் தகவல்களும் வெளிவரவில்லை. இந்த விவகாரத்தைக் கையிலெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களமோ, ஐக்கிய இராச்சியத்தில் அத்தகைய வங்கி ஒன்று இருப்பதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை என்றும் சாமர குணசேகர என்ற பெயரில் இலங்கையர் எவரும் பிரிட்டனில் வசிப்பதற்கான தடயங்களைக் கண்டறிய முடியவேயில்லை என்றும் தெரிவித்திருக்கின்றது. பணப் பரிமாற்றம் இடம்பெற்றதாகக் கூறப்படும் வங்கியைக் கண்டறிவதற்கு இலங்கை வங்கியின் உதவியைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நாடிய பின்னரும் வங்கி பற்றியோ லஞ்சப் பணத்தைப் பெற்றுக்கொண்டார் என்று கூறப்படும் நபர் தொடர்பிலோ எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அப்படியிருப்பின் இத்தகைய தகவல்கள் ஏன் நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்டன? இதன் பின்னணி என்ன? அதுவும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான இழப்பீட்டைக் கேட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் நிலையில் இத்தகைய தகவல்கள் ஏன் வெளியிடப்பட்டன? போன்ற கேள்விகள் எழும்புவது நியாயமானதே. இந்த விடயத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் இதனை ஒரு திசை திருப்பு நாடகமாக மேற்கொண்டிருக்கக்கூடும் என்று குற்றப் புலனாய்வு அதிகாரிகள் சந்தேகப்படுகின்றனர். அதேநேரம், வழக்குத் தாக்கலில் ஏற்பட்ட தாமதம் மற் றும் இலங்கையை விட்டு வெளிநாடு ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பவற்றின் மீதிருந்த கவனத்தைத் திசை திருப்புவதற்கான முயற்சியே இந்த லஞ்ச நாடகம் என்று சுற்றுச்சூழலியலாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

இப்படி எல்லாக் குழப்பங்களையும் உருவாக்கிவிட்ட நீதி அமைச்சர் அதன் பின்னர் எந்தக் கருத்தையும் இது தொடர்பில் முன்வைக்கவில்லை. லஞ்சம் வாங்கியவர் தொடர்பிலான விசாரணைகளில் என்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டது என்று அக்கறைப்படவில்லை. இவ்வளவு பெரிய மோசடி ஒன்று நடந்திருக்க முடியுமாயின் அது தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்தி, அதன் உண்மையை வெளிப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது. கப்பல் நிறுவனத்துடன் இழப்பீடு தொடர்பில் பின்கதவு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தால் அது இலங்கையில் உள்ளவர்களின் ஆதரவின்றி இடம்பெற்றிருக்கமுடியாது. அது தொடர்பிலான விசாரணைகளையும் முன்னெடுக்கவேண்டும். அதுதான்ஆட்சியாளர்களின்முறையானகடமை. முழுஉண்மைகளும் வெளிவரவேண்டும். இல்லையேல் சுற்றுச்சூழலியலாளர்களின் சந்தேகம்போன்றே இந்த விவகாரம் ஆட்சியாளர்கள் மீதான விமர்சனத்தை மடைமாற்றுவதற்கான நாடகம் என்றே நம்ப வேண்டியிருக்கும்.

# தூரநோக்கற்ற ஆட்சியினால் ஏற்பட்டுள்ள தன்னிச்சையான போக்கின் விளைவே இது

## மே தினச் செய்தியில் சஜித்



ஒரு நாடாக நாம் பல கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில், நமது நாட்டு உழைக்கும் மக்களும்உலகத்தொழிலாளர் தினத்தைக்கொண்டாட வேண்டியுள்ளதோடு, பல ஆண்டு காலதூரநோக்கற்றஆட்சியால் ஏற்பட்ட தன்னிச்சையான போக்கின் விளைவே இது என தனது மே தின செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்கள் தங்கள் பாரம்பரியங்கள், வரலாறுகள் மற்றும் சாதனைகளை ஒவ்வோர் ஆண்டும் மே முதலாம் திகதி கொண்டாடுகிறார்கள்.

1886ஆம் ஆண்டு எட்டு மணி நேர வேலை நாள் கோரி, தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த சிகாகோ நகர தொழிலாளர்களின் வரலாற்றுப் போராட்டத்தின் நினைவாக சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவதோடு, அந்த வரலாற்று சிறப்புமிக்க நாளை இலங்கை உழைக்கும் மக்களும் நினைவுகூருகிறார்கள்.

ஒருநாடாகநாம்பலகடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில், நமது நாட்டு உழைக்கும் மக்களும் உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாட வேண்டியுள்ளதோடு, பல ஆண்டு காலதூரநோக்கற்றஆட்சியால் ஏற்பட்டதன்னிச்சையானபோக்கின் விளைவே இதுவாகும்.

நாடு எதிர்கொண்டுள்ள பாரதூரமான பொருளாதார நெருக்கடியை தேசிய வளங்களை விற்று மூடி மறைக்கும் சிறுபிள்ளைத்தனமான, சாத்தியமற்ற, நிலைபேறற்ற தீர்வைக் கையாள்வதில் தற்போதைய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதோடு, நாடு தனது சகல தேசிய வளங்களையும் இழந்த பாலைவன நிலத்தை மட்டுமே இதனால் மீதப்படுத்தும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபயராஜபக்சஆட்சியை பொறுப்பேற்றதன் மூலம் எமது நாடு வரலாற்று ரீதியிலான பின்னடைவைச் சந்தித்ததோடு, தற்போதைய நிர்வாகத்தின் மூலம் அந்த தோல்வியுற்ற பயணம் மிகவும் வெற்றிகரமாக முன்னோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

அதேசமயம் சீர்செய்யப்படுவதாக காண்பிக்கும் உண்மை நிலையை கூறுவதை விட பயங்கரமானது என்பதோடு, பாரியதொரு ஆபத்து நம் முன்னே தோன்றியவாறுள்ளது.

மக்களின் வாழ்க்கை நாளுக்கு நாள் கடுமையான படுகுழியில் விழுந்து கொண்டிருப்பதோடு, ஏராளமானோர் வேலை இழந்துள்ளனர்.

வேலையின் கண்ணியத்தை முற்றிலுமாக ஒழித்து அவர்களை அவமதிக்கும் நிலையை அரசாங் கம் எட்டியுள்ளதுபலஆண்டுகளாகசம்பள அதிகரிப்புகள் மேற் கொள்ளப்படவில்லை என்பதோடு அரசியல் பழிவாங்கல்கள் சக்திவாய்ந்ததொரு அடக்குமுறை சூழ் நிலையாக வளர்ந்துள்ளது.

நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான செலவினங்கள் 40 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளமை மிகவும் துரதிர்ஷ்டமாகும்.

85 வீத மக்கள் கடன் வாங்குவது, கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான செலவினங்களை குறைப்பது, சேமிப்புச் செலவுகள், சுமார் 68 வீத மக்கள் உண்ணும் உணவின் அளவைக் குறைத்தல், உணவின் எண்ணிக்கை மற்றும் உணவு வேளைகளை குறைத்தல் போன்ற துயரங்களையும் சந்தித்து வருகின்றனர்.

சனத்தொகையில் 14.3 வீதமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற நிலையில், பொருளாதார நெருக்கடியின் அழுத்தம் மிகவும் கடுமையானதாக இருக்கும் என மத்திய வங்கி கணிப்புகள் எதிர்வுகூறியுள்ளன.

எல்லா எதிர்பார்ப்புகளும் தொலைந்து, புன்னகைக்கு பதிலாக கண்ணீரும், ஜனநாயகத்துக்குப் பதிலாக அச்சுறுத்தலும், அடக்குமுறையும் மக்கள் மீது அரசாங்கம் திணித்துவரும் சூழ்நிலையில்தான் தொழிலாளர் தினம்கொண்டாடப்படுவதோடு, இந்நிலையை மாற்றி, மனித சுதந்திரத்தையும், நாட்டின் அபிவிருத்தியையும் நிலைநிறுத்த, நிலைபேறான வேலைத்திட்டம் கொண்ட குழுவால் மட்டுமே முடியும் என்பது இன்று நன்றாகவே நிரூபணமாகியுள்ளது.

தோல்வியுற்ற முதலாளித்துவம் அல்லது காலாவதியான சோசலிசத்தில் இருந்து ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பது யதார்த்தமாவதோடு, முற்போக்குத் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட நடுநிலையானதொரு பாதையால் மட்டுமே இதை மேற்கொள்ள முடியும்.

பயங்கரவாதம் இல்லாத உன்னதநாடாகநமதுநாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொள்ளும் ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே என்பதோடு, இதன் நம்பகமான வேலைத்திட்டத்துடன் ஒரு வலுவானமுகாமைகட்டியெழுப்ப ஒன்றிணைவோம்எனதேசத்தின் சகலஉழைக்கும்மக்களையும் மரியாதையுடனும் அபிமானத்துடனும் அழைக்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் உழைக்கும் வர்க்கத்தின் துயர் துடைப்பதற்கும் உரிமைகளை வென்றெடுக்கவும் காங்கிரஸ் துணைநிற்கும்!

## மேதின வாழ்த்து செய்தியில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை முதலாளிகள் என்ற பண முதலைகளும், உழைப்பை சுரண்டிய அதிகார வர்க்கமும் அடக்கி ஆண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது போல, அவர்கள் உழைப்பால் உயர்ந்து உச்சம் தொடுவதற்கு என்றும் நாம் பக்கபலமாக இருப்போம். உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலிப்போம்.' என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள மேதின வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

உலகிலுள்ள தொழிலாளர்கள் ஓரணியில் திரண்டு உரிமைகளுக்காகப் போராடி வெற்றிகண்ட–உயரியவெற்றி திருநாளாகவே மே தினம் நினைவு கூரப்படுகின்றது. தங்களின் உயிரைத் தியாகம் செய்தே தொழிலாளர் வர்க்கத்துக்கு அன்று உரிமைகள் வென்று கொடுக்கப்பட்டன. தொழிலாளர்கள் உழைப்பால் உயர்ந்து நிற்க, தமது உயிரைத் தியாகம் செய்த அத்தனை ஊழிய படையினருக்கும் எங்கள் வீர வணக்கம். தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எமது மலையக மண்ணில் உயிர் தியாகம் செய்த மலையக தொழிற்சங்க தியாகிகளையும் இந்த உன்னதமான தருணத்தில் நெஞ்சில் இருத்திநினைவுகூருகின்றேன்.

உழைக்கும் வர்க்கத்தினரின் துயர் துடைக்க இலங்கை தொழிலாளர்கள் காங்கிரஸ்அன்றுமுதல்இன்று வரை எல்லா வழிகளிலும் போராடியுள்ளது. இனியும் அதே வழியில் தான் பயணிக்கும். அதுமட்டுமல்ல மலையகபெருந்தோட்டத்தொழிலாளர்களும் உழைப்பால் உயர்ந்து நிற்பதற்கான சகலவித ஏற்பாடுகளையும் செய்வதற்கு இனிவரும் நாள்களில் முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்கப்படும்.

இலங்கையில் உள்ள தொழிலாளர்களில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் வேறு விதத்தில் நடத்தப்படும் நிலை காணப்படுகின்றது. இந்நிலைமை மாற வேண்டும். அவர்களும் சமமாக நடத்தப்படும் வகையில் தொழில்சார் சட்டங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்காக நாடாளுமன்றத்தில் எமது குரல் ஓங்கி ஒலிக்கும்.

அதேபோல புலம்பெயர் தொழிலாளர்களாக உள்ளோரிலும் எமது மலையக சொந்தங்களின் பங்களிப்பு ஏராளம். அவர்கள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆடை தொழிற்சாலை, கட்டுமான தொழில் உள்ளிட்டவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பும்உறுதிப்படுத்தப்பட வேண்டும்.உழைக்கும்வர்த்தகத்தின் துயர் துடைக்கவும் உரிமைகளை வென்றெடுக்கவும் காங்கிரஸ் என்றும் உறுதுணையாக நிற்கும். நாட்டையும், வீட்டையும் தமது உழைப்பால் உயர வைக்கும் பாட்டாளி சொந்தங்களுக்கு மே தின நல்வாழ்த்துகள். என்றும் நாங்கள் உங்களுடன்.
– என்றார்.

# மலையகத்தில் மாற்றம் ஏற்படுத்தியதாக அடுத்த மே தினம் அமைதல் வேண்டும்!

## அரவிந்தகுமார் வாழ்த்து



நாட்டின் தேசிய வருமானத்தின்பங்காளிகளான பெருந்தோட்ட தொழிலாளர்களின்வாழ்வாதாரம் சமகால பொருளாதார நெருக்கடிக்கு ஈடு கொடுக்கும் வகையில் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்துக்கள்இருக்க முடியாது. அதனையே நாமும் வலியுறுத்தி நிற்கிறோம். அடுத்து வரும் மே தினமானது மலையகத்தில்மாற்றங்களை ஏடுத்தியிருக்கவேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மே தினச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மலையகத்தை பூர்வீகமாக கொண்டுள்ள பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்திய வம்சாவளியினராக அறியப்படுகின்றனர்.

இந்திய வம்சாவளியினர் என்ற பெயரோடு அவர்கள் இலங்கை திருநாட்டுக்கு பெருவாரியான வருமானத்தை ஈட்டிக் கொடுத்து வருகின்றனர்.

கடந்த 200 வருடகாலமாக எமது நாட்டின் தேசிய வருமானத்தில் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கிவரும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் இன்றும் பல்வேறு குறைபாடுகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

இத்தகைய கவலைகள், இன்னல்கள் மற்றும்முட்டுக்கட்டைகளில் இருந்து மலையக சமூகம் விடுபட வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

சமகாலபொருளாதார நெருக்கடியானது மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் கணிசமான பாதிப்பை அல்லது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இருந்த போதிலும் அவர்கள் தொடர்ச்சியாக நாட்டுக்காக உழைத்து வருகின்றனர். ஆகவே, நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்வாதா ரங்களுக்கு ஏற்ற வகையில் பெருந் தோட்டதொழிலாளர்களின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை இந்த மே தினம் உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.